460

ஸுபாநு வூ
ஐப்பசி - கார்த்திகைமீ

ஸம்புடம் - 2
ஸஞ்சிகை - 11

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 DEC 1943
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

பிரசுரிக்குமிடம்:

நெ. 5, ராமஸ்வாமி தெரு, தியாகராயநகர்,

சென்னை

November, 1943
Vol. 2, No. 11

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

		பக்கம்
1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	384
2.	ஸ்ரீ பிள்ளைபாக்கம் அழகியசிங்கர் வைபவச் சுருக்கம்	390
3.	மைஸூரும் மாதவனும்	396
4.	அடைக்கலப்பத்து	403
5.	செய்திகள்	405
6.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	412

ஸ்ரீ:

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபனம்

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள்—மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும். காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதி யனுப்புதல் நலமாகும்.

2. ப்ரசுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்களெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாஶம் ப்ராப்தமாகும்பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 2	ஸ்வபாநு வருஷம் ஐப்பசி - கார்த்திகை மீ	ஸஞ்சிகை 11

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா |
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||
ந்ருஸிம்ஹபக்தகேஹாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்களுள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[3-ம் அங்கம்]

[ஸ்ரீ. உப. அன்பில் வி. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A B.L., அட்வோகேட், திருச்சி.]

[ஸம்புடம் 2, ஸஞ்சிகை 10, பக்கம் 367-ன் தொடர்ச்சி]

இப்படி விவேகர் மோக்ஷ ஸித்தியைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில், எதிரி மஹா மோஹனின் தூதன் கடிதம் கொண்டு வருகிறான். அந்தத் தூதனுக்கு 'ஸம்வ்ருதி ஸத்யன்' என்று பெயர். அத்வைதத்தில் 'மாயை' என்று பேசுவதைப் பௌத்தத்தில் 'ஸம்வ்ருதி' என்பர். மாயையால் உலகம் ஸத்யம்போலத் தோன்றுகிறது என்று வாதிக்கும் வாதி. ப்ரபோத சந்த்ரோதயத்தில் மஹா மோஹர், அந்யதா க்யாதி வாதியான நையாயிக மதத்தைத் தூதனாக அனுப்பினர். இங்கே பௌத்த மத ஸம்வ்ருதி ஸத்யனைத் தூதனுப்புகிறார். யுத்தம் செய்யும் இரு கக்ஷிகளுக்கும் நடுவில் ஸாம தாநோக்திகள் 'ஸங்க்ரஹம்' என்கிற கர்ப்ப ஸந்தியின் அங்கம். தூதன் வந்து எதிரி வ்ருத்தாந்தத்தை நமக்குத் தெரியச் செய்வது ஓர் உபஸந்தி. அப்படியே 'லேக்யம்' என்னும் கடிதமும் ஓர் உபஸந்தி. கடிதம் ஒரு பூர்ஜ பத்ரத்தில் எழுதப்பட்டது. பூர்ஜ பத்ரத்தில் மந்மத லேகங்கள் எழுதுவதாக மந்மத ஸம்ப்ரதாயம்.

தூதன் அபிவாதநம் செய்கிறான். 'அஸ்தாநத்தில் செல்லாமல் ஸரியான ஸ்தாநத்தில் மட்டும் இருந்துகொண்டு சிரஜீவியா யிருப்பாயாக; பொய்யைப் பொய்யென்று பார்ப்பதோடு மட்டும் நீ இரு. உண்மைப் பொருள்களைப் பொய்யென்று பேசாதே' என்பது விவேகர் கருத்து. 'பொய்ப் பொருள்களைப் பொய் ப்ராந்தி கல்பிதம் என்று பேசுவதில் எமக்கு ஆக்ஷேபமில்லை; அஸ்தாநத்தில் செல்லாதே; ஸ்தாநத்தோடு நிற்பாயாக; இந்த க்ரமத்தில் நிலைநின்று நீ சிரஜீவியா யிரு' என்று சிரஜீவித்வாசீர்வாத ரஸம். சிரஜீவி ஆசீர்வாதமும் மனமாரச் செய்ய வேணும். தன் கக்ஷிக்கு விரோதமும் கூடாது. இப்படிச் சாதுர்ய ரஸம். ஸம்வ்ருதி ஸத்யத்தோடும் ஸந்தி ரஸம்.

தூதன்:—மஹா மோஹர் பதினான்கு லோகங்களுக்குச் சக்ரவர்த்தி. அவர் ஆஜ்ஞா சக்ரம் அங்கெல்லாம் செல்லும். அவர் மந்த்ரி த்வாபரரைக் கொண்டுதான் அவருடைய ராஜ்ய கார்யங்கள் எல்லாம் நிர்த்தாரணம் செய்யப்படுகின்றன. அவர் துர்மதியின் மதத்திலேயே ப்ரதிஷ்டிதர். அவர் லோபன் என்னும் கணக்கனைக்கொண்டு இக்கடிதத்தை எழுதச் செய்து அனுப்பி யிருக்கிறார்.

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS 385 20 DEC 1943

"एतत्कायादिमान्यस्य महामोहस्य शासनम् ।
संसारह्रासभीतानां स्वर्गिणामपि संमतम् ॥"

மஹா மோஹருக்கு த்வாபரர் மந்த்ரி. த்வாபர என்பது ஸம்ஶயம்; விபரீத நிஶ்சயம் வேண்டாம். ஸம்ஶயத்தையே உறுதி செய்தால் போதும். விபரீதக் கொள்கையிலும் ஸம்ஶயமே படும் நிலை கொடியது. ஸம்ஶயமே மதமாகக் கொள்பவரு முண்டு. அவர்களை 'ஸம்ஶயாத்மா விநஶ்யதி' 'நாயம் லோகோऽஸ்தி ந பர:' என்று கீதை தூஷித்தது. 'ஸிம்ஹாஸநியப்ரமாணஸாவப்ஹௌ' என்று ஜகத் குருக்களுக்குப் பிருது கூறுவர். இந்த ஸம்ஶய மந்த்ரி, ஸம்ஶயத்தால் ஸர்வ கார்யங்களை நிர்த்தாரணம் செய்பவர். அநிர்ணயமே இந்த ஸம்ஶய மந்த்ரி நிர்த்தாரணம் செய்வது. ஸம்ஶயமே இவரால் நிர்த்தாரித ஸித்தாந்தம். மஹா மோஹர் துர்மதி மத ப்ரதிஷ்டாபகர். அதிலேயே ப்ரதிஷ்டிதர். இப்படி மஹா மோஹர் பிருதுகள். லோபன் ஒன்றையும் கொடுக்க ஸம்மதிக்கமாட்டான். அவன் கையில் பொக்கிஷ மிருக்கிறது. இங்கே மஹா மோஹர் கொஞ்சம் விவேகருக்கு இடம் கொடுத்து ஸமாதாந பத்ரிகை யனுப்புகிறார். லோபனே தன் கையால் எழுதும்படி செய்யாவிட்டால், அவன் பின்பு தகரார் செய்வான். அவனைக் கட்டுப்படுத்துவதற்காக அவன் ஸ்வஹஸ்த லிகிதமாக ஸந்தி பத்ரிகையை எழுதச் செய்ததென்று ரஸம். காமன் என்ற மந்மதன் லோகமாந்யன். அவனுக்கும் மாந்யர் மஹா மோஹர். காமன் மஹிமையை மேலே இரண்டு ஶ்லோகங்களால் இப்பத்ரிகை விவரிக்கும். இந்தப் பத்ரிகை அனுப்பும் மஹா மோஹ சக்ரவர்த்தியின் கட்டளை ஸ்வர்க்கிகளான தேவர்களுக்கும் ஸம்மதமானது. 'ஸுரர்களும் அஸுரர்களும் சேர்ந்து ஸம்மதித்து இந்தக் கட்டளையைப் பிறப்பித்திருக்கிறோம். இவ்விஷயத்தில் நாங்களெல்லோரும் ஒரே கக்ஷி. 'வயம் பஞ்சாதிகம் ஶதம்'. அவர்களும் எங்களோடு சேர்ந்தது பொய் யென்பீரோ? 'ஸம்ஸாரந்ருத்யந்தாவீதாஸ்ஸ்வர்க்கா: பரிவஸந்தி ந:' என்கிற மஹர்ஷி வசநத்தை நினைப்பூட்டுகிறேன்' என்பதை 'ஸம்ஸாரஹ்ராஸபீதாநாம்' என்ற பதத்தால் மஹா மோஹர் வ்யஞ்ஜநம் செய்கிறார்.

"परोपास्तिश्रद्धावधिकमतिवृत्तं यदिह ते
तदैश्वर्यप्राप्त्यै भवतु बहुमन्येमहि तदा ।
अतिक्रान्तावस्मद्भ्रुकुटिनटनारंभसमय-
प्रदीप्तक्रोधादिप्रतिभटनिरुद्धो न भवसि ॥"

5/10119

விஷ்ணு பக்தி, ஶ்ரத்தை முதலியவற்றை நீர் பெருக்க ஆரம்பித்திருக்கிறீர். அவற்றை அடியோடு தடுக்க எனக்கு அவஶ்யமில்லை. நான்கு விதமானவர் விஷ்ணு பக்தி செய்வார்கள். அவர் ஆர்த்தன், ஜிஜ்ஞாஸு, அர்த்தார்த்தீ, ஜ்ஞாநீ என்பவர். ஐஶ்வர்யத்தை அபேக்ஷித்து விஷ்ணு பக்தியைப் பற்றுவதில் எனக்கு ஆக்ஷேபமில்லை.

ஐஸ்வர்ய காமரெல்லாம் என் ஆளுகைக் குட்பட்டவரே. 'ஹ்ரா?)ஜெ ஓாஹலஸஂவூவெ'. விஷ்ணு பக்தி, ஸ்ரத்தை இவற்றை நீர் வளர்ப்பது அதிகப்ரஸங்கமே. அதிவ்ருத்தமே ஆயினும், அது இருந்தால் இருக்கட்டும். அதை நானும் மெச்சவும் தடையில்லை. இந்த வரம்பைத் தாண்டி, மோக்ஷத்தை உத்தேசித்து நீர் இவற்றைப் பற்றச் செய்தால், என் புருவத்தை அசைக்கிறதும், அக்நி ஜ்வாலையுடன் கிளம்பும் க்ரோதன் முதலிய என் ரணபடர்களால் நீர் தகையப்பட்டு நீரே இல்லாமற் போவீர். இந்த ஸ்லோகத்தில் அரம் விழுந்தாற்போல் விவேகருக்கு மங்களமாயும் பொருள் படும்படி பதங்கள் அமைந்துள்ளன. 'க்ரோதன் முதலிய என் படர்களால் நீர் அடக்கப்பட மாட்டீர்' என்றும் பொருள். நிருத்தனாக நீராகமாட்டீர்.

"विश्वाधिको विलयमेष्यति कस्य भूम्ना
वीरः प्रसिद्धमहिमा विबुधेषु कामः ।
क्रोधोदितं यदनुभाववशेन शंभोः
शृंगारशीतलमभून्नयनं तृतीयम् ॥"

இரண்டு ஸ்லோகங்களால் காமனுடைய ப்ரபாவமும், ஒரு ஸ்லோகத்தால் கோபனுடைய ப்ரபாவமும் வர்ணிக்கப்படுகின்றன. தன் ஸேனா வீரர்களின் வலிமையை எடுத்துக் காட்டினால்தான் விவேகர் பலாபலங்களைத் தெளிந்து ஸமாதாநத்தை ஒப்புவார். 'விஶ்வாயிகொ ரு௱ெ்ரா ஊஹஷிஃ' என்று ருத்ரனை வேதம் கொண்டாடுகிறது. விஸ்வத்துக்கெல்லாம் அவர் மேலானவர்; அதிக பலமுடையவர். 'ஷக ஷவ ரு௱்ரஃ' ப்ரளயத்திலும் அவர் மிகுந்துளார் என்று சிலர் ஏத்துவர். 'ஒருவனென்று ஏத்த நின்ற நளிர்மதிச் சடையனென்கோ.' அவருக்கும் லயமுண்டென்று விவேகராகிய உம்முடைய கட்சி. 'ஒன்றுந் தேவி'ல் உங்கள் சடகோபர் இதை நிர்ணயித்தார். ஸ்ருதி ஏத்திய விஸ்வாதிகருக்கும் அதிகர் எங்கள் காமவீரர். அவருக்குத்தான் விஸ்வாதிகர் என்ற பிருது தகும். அவர் பலம் அபரிமிதம். 'கூஹஸூயநூஷஃ கிஂகரொ ஓரூயவூா' என்பது விஸ்வப்ரஸித்தம். உடம்பு பாதியாயிற்று. பாதி பெண்ணானார். அவருக்கு லய மிருக்கலாம். அவருக்கும் அதிகனான காமனுக்கு ஒருக்காலும் லயம் வர முடியாது அவனை ஒடுக்கி ஈனமாக்கும் வலிமையுடையவர் யாவருளர்? முதல் பாதத்திற்கு மற்றோர் பொருளும் கூறலாம். விஸ்வாதிகரான ருத்ரன் யாருடைய ஐஸ்வர்யத்தால் வலிமையால் ஒடுங்குவார்? காமன் பல மொன்றுதானே அவரை ஜயித்து ஒடுக்கிற்று; பார்வதி யென்னும் பெண்ணுக்கு அடிமை யாக்கிற்று. விஸ்வாதிகர் கௌரீ தாஸரானார். மஹேஸ்வரர் ஓர் அபலைக்குத் தாஸரானார். 'ஹுதவூஹூதூவநதாஂஶி தவாஜூி ஊாஸஃ' என்று குமார ஸம்பவத்தில் ஈஸ்வரன் பார்வதிக்குத் தாஸனென்று பணிந்தது பாடப்பட்டது. தேவர்கள் எல்லாருக்கும் காம வீரன் வலிமை தெரியும். உமக்குப் பூஜ்

யரான நம்பிக்கையான தேவர்களையே கேளும். விஸ்வாதிகரான ருத்ரரைக் காமன் ஜயித்தானென்பது எப்படி உண்மையாகும்? அவர் நெற்றிக்கண் அவனைக் கொளுத்திச் சாம்பராக்கினது உலக ப்ரஸித்தமல்லவோ? இந்தக் கேள்விக்குப் பின்பாதியில் அழகாகப் பதில் கூறுகிறார். கடைசியில் முடிந்ததென்ன? அங்கத்தை யிழந்த பிறகும், உடம்பே தொலைந்து போய்விட்டாலும், அவன் அந்த அக்நிக் கண்ணை ஸ்ருங்கார சீதளமாக ஜில்லிடச் செய்தானல்லவோ? தன்னை யெரித்த அக்நிக் கண்ணையே கௌரீ விஷய ஸ்ருங்கார வசமாக்கிக் குளிரச் செய்துவிட்டான். 'ஸீதோ ஹவ' என்ற ஸீதையின் ஆஜ்ஞை போன்றது மந்மதன் ஆஜ்ஞை. 'வாவகஸ்ய யஶோஷ்தா' என்று ஸ்வபாவ வ்யவஸ்தையைச் சொல்லுவர். மந்மதன் ப்ரபாவத்தால் அதுவும் மாறிவிட்டது. ஈஸ்வர வ்யவஸ்தையையும் மாற்றும் ப்ரபாவம். 'யதாத உஹ ந ஶெஷ்வ ஹிதா', 'ஶம்ஹோ:' முதல் பாகத்தில் சொன்ன க்ரோத ருத்ரர் சம்புவாய், சங்கரராய், மங்களகரராய் மாறினரே. மஹேஸ்வரர் பௌருஷம் (ஆண்மை) பாதியாயிற்றே.

"कामोऽसौ समवर्तताग्र इति हि ब्रूते समोची श्रुतिः
कामादेव जगज्जनिस्थितिलयैराद्यः पुमान् क्रीडति ।
निष्कामोऽपि सकाम एव लभते निःश्रेयसं दुर्लभं
कामः कस्य वशे क एष भुवने कामस्य न स्याद्वशे ॥"

முன் ஸ்லோகத்தில் 'விஸ்வ ப்ரளயத்திலும் காமனுக்கு ப்ரளயமில்லை; அவன் அழிவதே யில்லை' யென்றார். 'ஸ்வாநேக ஶிஷ்யதே ஶேஷி ஸம்ஜ்ஞ' என்று ஸ்ரீ பாகவதத்தில் 'மஹா ப்ரளயத்தில் உலகமெல்லாம் லயித்தாலும் ஸர்வ சேஷியான நீர் ஒருவர்தான் சேஷியாக மிகுந்திருப்பவர்' என்று பகவத் ஸ்தோத்ரம். சேஷி யென்பவர் மிகுந்திருப்பவர்; மற்றதை யெல்லாம் தம் வசமாக வுடையவர். 'வஶீ' என்பது, எல்லாம் அவர் வசம் என்பதைக் குறிக்கும். 'ஸவஸ்ய வஶீ ஸவஸ்யெஶாந:' என்ற ஸ்ருதி, 'வஶ்யாஜி ஶஜெஹ்ய:' என்ற ஸூத்ரத்தால் குறிக்கப்பட்டது. முதல் அத்யாயம் மூன்றாம் பாகத்தின் முடிவு ஸூத்ரம். 'த்யுஹ்வாத்யாயதநம்' என்று அப்பாதம் தொடங்கிற்று. 'விஶ்வாயாஸ: ஸ கூத்தா' என்று அப்பாதம் தீர்மானிப்பது. இங்கே காமனை ஒருவரும் ஸ்ருஷ்டிப்பதில்லை. விஸ்வ ஸ்ருஷ்டிக்கு முன்பே அவன் தானே ஸ்வயம்புவாக உளன். அவனால்தான் எல்லாம் ஸ்ருஷ்டியும் ஸ்திதியும் லயமும் ஏற்படுகின்றன. ஜந்மாதி லக்ஷணமும் பகவானுக்குக் காமன் மூலமாகத் தான் ஸம்பவிக்கிறது. காமனை ஸஹாயமாகக் கொண்டுதான், அவர் ஜந்ம ஸ்திதி லயங்களால் விளையாடுகிறார். க்ரீடை லீலை யென்பது தானே விவேகர் முதம். காம மில்லாத லீலை யுண்டோ? 'யது காமயதே வஶீ' 'தோஷதெ ஹமவ்ரஹ' காம வசர், மற்றவர்க்கு வசி. 'காமஸ்ஷமெ ஜ்வஶேவதாமெ ஜநவொ

ரேத: ப்ரதமம் யதாஸீத்' என்ற ஸ்ருதியை இங்கே மோஹர் பத்ரிகை குறிக்கிறது. அந்த ஸ்ருதியை 'ஸஸீவீ' (அழகானது) என்று மோஹன் புகழ்கிறான். 'ஸுஸதா உத்தமேர ஸுவஸீத்' என்னும் ஸ்ருதியை வைநாசிகர் புகழ்வதுபோல. ('மநஸோரேத:' மநஸ்ஸின் புத்ரன் மநஸிஜன்) மநஸ்ஸின் புத்ரனென்று உலகத்தில் வழங்கினாலும், அவன் ஸ்ருஷ்டிக்கு முன்பே (அக்ரே) இருந்தானென்று ஸ்ருதி அறிவிக்கிறது. மோஹன் மனத்தையும், இந்த ஸ்ருதியின் அழகு வசீகரிக்கிறது. 'ஹிரண்யகர்ப்பஸ்ஸமவர்த்ததாக்ரே' என்பது போல் 'காமஸ்தத்' 'ஸோऽகாமயத' என்று காமனை முன்னிட்டுத்தானே ஸ்ருஷ்டியின் தொடக்கம். உலக ஸ்ருஷ்டிக்கு அவன்தானே மூலம். அவனுக்கும் ஓர் மூலமுண்டோ? 'ஸுஷுப்தி: ப்ரளயோ' உங்கள் ஆதிபுருஷன் ஸ்ருஷ்டிக்கு முன்பும் ப்ரளயத்திலும் இருப்பது போல், காமமும் இருப்பதேதான். காமனில்லாமல் அவர் என்ன செய்ய முடியும்? ஸ்ருஷ்டி ஸ்திதி லயங்கள் காம மூலமாக இருக்கட்டும். மோக்ஷம் காமமூல மல்லவே. 'ஜய ஸகாமயோ ந:' 'ப்ரஜாதி ரஜஸ்ஸு ஸகாமோஹத:' காமத்தை ஜயித்து அதை த்யஜித்தவன்தானே மோக்ஷாதிகாரி என்று கேட்பீரோ? மோக்ஷாதிகாரியென்பவன் மோக்ஷகாமன் தானே. முமுக்ஷு என்பதற்கு என்ன பொருள்? பாணிநி பகவானைக் கேளுமே. அதிகாரி என்பதற் கென்ன பொருள்? ஜைமினி பகவானையும் வ்யாஸ பகவானையும் கேளுமே. மோக்ஷ காமனை யில்லாமல் எப்படி முமுக்ஷு ஆவான்? எப்படி மோக்ஷாதிகாரி யாவான்? மோக்ஷமும் புருஷார்த்தம்தானே; புருஷன் அர்த்திப்பதுதானே. காமனை நீங்களும் விட முடியாது. அவனையல்லாமல் உங்களுக்கும் கதியில்லை 'நிப்ரஜயஸம் த்ருஷ்டுஹ்' மோக்ஷத்தை அடைவதை நீ ஒப்புகிறாயோ என்று கேட்பீரோ? இல்லை அது அடையப்படுவதே யில்லை. மோக்ஷ மென்பது மில்லை. அது பெறப்படுவது மில்லை. ஒருவரும் பெற்றதில்லை. இருந்தா லல்லவோ பெறுவது? 'காமஸ் கஸ்ய வஶே கஸ் காமஸ்ய ந வஶே' [காமன் யாரிடம் வசப்பட்டவன்? காமனுக்கு வசமில்லாதவன் யார்?] 'ஜயத்யஸ்ய ப்ராஜ்ஞோ தாவஜோ தாவஸ்யைகோ ந கஸ்யசித்' என்றார் குருகுலக் கிழவர். பாரத யுத்தாரம்ப ஸமயத்தில், 'காமஸ்ய ப்ராஜ்ஞோ தாவஜோ தாவஸ் காமோ ந கஸ்யசித்' என்று சொல்லலாம். விவேக மஹாராஜரே! இது ஸத்யமே. 'இதி ஸத்யம் மஹாராஜ'

"यदि कुप्यति कोपाय न कोपमतिवर्तते।
अकोपविषयं कोपं कथं कश्चिद्विजेष्यते॥

'காம ஏஷ: க்ரோத ஏஷ:' என்று உங்கள் கீதை காமன் வலிமையையும் கோபன் மஹிமையையும் பாடிற்று. 'ஜஹி ஶத்ரும் மஹாபாஹோ காமரூபம் துராஸதம்' என்று காமன் துர்ஜயனென்பதை உங்கள் கீதாசார்யர் ஒப்பினார். காமத்தைத் தடுத்தால் கோபம் உதிக்கும். காமத்திலிருந்து கோபம் உற்பத்தியாவது. இரண்டையும் ஒன்றாக உங்கள் கீதை பேசியது ஸரியே.

இந்த மூன்றும் அங்கம் இங்கே முடிவடைகிறது. அடுத்த அங்கத்தில் காமன் க்ரோதன் முதலியவர்கள் வருகிறார்கள். இங்கே தூதன் முகமாக அடுத்த அங்கத்தில் வரப்போகும் பாத்ரர்களை ஸூசிப்பது 'அங்காஸ்யம்' என்பர். கீதையின் நினைவோடு தொடங்கிய இவ்வங்கம் கீதையின் நினைவோடு முடிவடைகிறது. கீதையின் பாராயணுநுஸந்தானங்கள் மோக்ஷத்திற்கு முக்ய ஸாதநமாகும். மோக்ஷத்தில் காமம் வைக்காமல் மோக்ஷம் கைகூடாது. ஆதலால் முமுக்ஷுக்கள் காமத்தைத் தள்ள முடியாதென்று முன்பு காட்டப்பட்டது. இங்கே, கோபத்தின் மீது கோபியாமல், எப்படிக் கோபத்தைத் தள்ளுவது? ஆகையால் முமுக்ஷுக்களால் கோபத்தையும் அடியோடு தள்ளிவிட முடியாதென்று இங்கே மோஹர் கட்சி. கோபத்திற்குக் கோபத்தை விஷயமாக்காமல் எப்படிக் கோபத்தை ஜயிப்பது? தார்க்கிக சிரோமணிகள் இந்த யுக்திக்கு என்ன பதில் சொல்லக் கூடும்? அகோப விஷயம். கோபத்திற்கு விஷயமாக்காமல்; கோபம் கொள்ளாமல்.

ஸுமதி :—காமனை ஜயிப்பதிலும், கோபனை ஜயிப்பது கடினமல்லவா? காமன் மீது கோபங்கொண்டு தானே காமனை ஜயிக்கவேணும்? காமனை ஜயிக்கவும் கோபன்தானே ஸாதநமாகிறான். அவனை ஜயிக்கவெண்ணி, அவன்மீது கோபம் கொள்வோமாகில் திரும்பவும் அவன் வசமேயாய் விடுகிறோம். இவன் யுக்தியை எப்படிப் பரிஹரிப்பது?

விவேகர் :—மனத்துக்கினியாளே! அச்சப்படாதே. ஸ்தாநத்தில் கோபம் குற்றமல்ல. கோபிக்கத்தக்க விஷயத்தில் கோபம் குணமேயன்றித் தோஷமல்ல. காமத்தின்மீது வெகுளி அவஶ்யமே. காமன் கோபத்திற்குச் சரியான ஸ்தாநம். கோபனும் கோபத்திற்கு தக்க ஸ்தாநம். அஸ்தாநத்தில் ஸ்நேஹமும் காருண்யமும் காட்டின அர்ஜுநனது மோஹத்தைப் போக்கக் கீதை அவதரித்தது. 'துஷ்டன் விஷயத்தில் கோபப்பட்டு நிக்ரஹிக்காமல் தயை புரிவது அபும்ஸத்வம்' என்று ஸ்ரீபாஷ்யம். பிறகு தூதனைப் பார்த்துச் சொல்லுகிறார்.

"अप्राणितमहामोहमनंगीकृतमन्मथम् ।
विधूतप्रतिघं लोको विवेकं बहु मंस्यते ॥"

பிதிர் போட்டாற்போல் பேசுகிறார். விவேகனை உலகம் பஹுமதிக்கும். மத்யஸ்தலோக மல்லவோ நம்மை மெச்சவேணும். மோஹதசை மூர்ச்சை தசை. பெருமூச்சு விடும் மஹா மூர்ச்சை யுண்டு. மஹா மோஹனை மூச்சே விடாமல் அடிப்பர் விவேகர். மந்மதனை அநங்கனென்பர். அவனை அநங்கீகரிப்பவர் விவேகர். அநங்கீகரிப்பவரென்பதற்கு அநங்கனுகச் செய்பவரென்றும் பொருள். அநங்கனுக—சரீர மிழந்தவனுகக் கொலை செய்பவர். 'வியூதஶூதிவம்'. 'ப்ரதிகம்' என்பது கோபத்தையும் சத்ருவையும் விக்நத்தையும் சொல்லும். கோபனைத் துரத்திவிட்டவர். விக்நங்களையும் சத்ருக்களையும் போக்கினவர். [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ பிள்ளைபாக்கம் அழகியசிங்கர் வைபவச் சுருக்கம்

(ஸம்புடம் 2 : ஸஞ்சிகை 10, பக்கம் 346-ன் தொடர்ச்சி)

நரஸிம்ஹபுரம் ப்ருந்தாவநத்தில் கிடைத்த அநுக்ரஹம்

பின் குளத்தில் நீராடிக் கரையிலிருக்கும் ப்ருந்தாவநங்களை ஸேவித்துக்கொண்டு மடத்துக்கு எழுந்தருளும் ஸமயத்தில் யாரோ ஒரு ஸ்வாமி நெருங்கி வந்து, 'இந்த ப்ருந்தாவநக் கட்டிடத்தில் இன்னமொரு ப்ருந்தாவநம் கட்ட இதோ இட மிருக்கிறது' என்று காட்டவே, அதைக் கேட்ட ஸ்ரீ அழகியசிங்கரும், அந்த ப்ருந்தாவநங்களில் எழுந்தருளி யிருக்கிற ஶாபாநுக்ரஹம் பெரிய ஸ்வாமி என்கிற ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன் முதலான மூன்று ஸ்வாமிகளின் மேன்மையையும் தம்முடைய நீர்மையையும் பார்த்து, 'நமக்குக்கூட இப்பேறு கிடைக்குமோ! வென்று ஒரு நாழிகை வரையில் திருக்கண்களை மூடிக்கொண்டு த்யாநத்தில் எழுந்தருளியிருந்தார். அந்த ஸமயத்தில் மூன்று கருடாழ்வார்கள் ஆகாயத்தில் தமக்கு நேராக த்வனித்துக்கொண்டே வட்ட மிடுவதைப் பார்த்துச் சில ஸ்வாமிகள் ஸ்ரீ அழகியசிங்கருக்கு விஜ்ஞாபிக்க, ஸ்ரீ அழகிய சிங்கரும் கண்களைத் திறந்து அவைகளைப் பார்த்து ஆஶ்சர்யப்பட்டவராய், அங்குள்ள ஸ்வாமிகளைப் பார்த்து, 'புநராவ்ருத்தி யில்லாததான ஸ்ரீ வைகுண்ட லோகத்திலிருந்து நான் ஒருவனன்றோ இப்போது திரும்பி வந்துவிட்டேன்' என்று தாம் த்யாநம் செய்கிற காலத்தில் ஸ்ரீ வைகுண்டத்தில் இந்த மூன்று ப்ருந்தாவந ஸ்வாமிகளோடு சேர்ந்திருந்ததாயும், மறுபடியும் இவர்கள் கூப்பிட்டபோது திரும்பி வந்ததாயும் பொருள்படும்படி அருளிச்செய்துவிட்டு, மடத்துக்கு எழுந்தருளி அன்றைதிநம் திருநக்ஷத்ராராதநத்தை உபக்ரமித்து, உபயவேத பாராயணங்களுடன் அபிகமநத்தை முடித்துக்கொண்டு, மூன்று மணிக்கு மாத்யாஹ்நிக க்ருத்யங்களையும் முடித்துக்கொண்டு மங்களாரத்தி செய்து, தாத்காலிக சாற்றுமுறைகள் ஆனபிறகு ததீயாராதநமும் நடைபெற்றது. இதற்குள் மணி ஐந்தாகிவிடும். இதற்குமேல் பிக்ஷாடந ஸங்கல்பம். இம்மாதிரியே ப்ரதிதிநமும் நடந்து பத்தாவது நாளில் விசேஷாராதநங்களும் நடைபெற்றன. மறுதிநம் உத்ஸவார்த்தம் எழுந்தருளிய ஸ்வாமிகளும் மந்த்ராக்ஷதை பெற்றுக்கொண்டு தங்கள் தங்கள் க்ராமங்களுக்கு எழுந்தருளிவிட்டார்கள்,

திருமேனியில் ஏற்பட்ட அசக்தி

ஸ்ரீ அழகியசிங்கருக்கு இந்த உத்ஸவத்தி லுண்டான ஶ்ரமத்தாலும், இந்த உத்ஸவத்தின்பொருட்டே வேகமாக எழுந்தருளிய மார்க்க ஶ்ரமத்தாலும், திருமேனியி லுண்டான நோய்க்குப் பரிஹாரமாகச் சிலர் ப்ரவர்த்தியாகும்படி எண்ணெயமுது செய்யும்படி ப்ரார்த்திக்கவே, அப்படியே அமுது செய்தும் ப்ரவர்த்தி யாகாதபடியால் அதையே வ்யாஜ மாக்கிக்கொண்டு நாளுக்கு நாள் திருமேனியில் தளர்ச்சி ஏற்பட்டுக்கொண்டு வந்தது. அப்போது திருக்குடந்தை ஸ்ரீ சக்ரவர்த்தி ஸ்வாமியும் தமக்கு உபாயாநுஷ்டாநத்தை ப்ரார்த்திக்க, அவரிடத்தில்,

> “ஶ்ரீஸாணுஹ்ரு விஷுஷ டிஷம் ஃஷஜூம்
> ஸஞாநஸ்வீஜம் கூஷாவாணுவா நாழ ”

என்கிற ஶ்லோகத்தைச் சொல்லி விசேஷ கடாக்ஷம் செய்தருளி, க்ருச்ராசரண பூர்வகமாக தூமசகடாரோஹண மில்லாமல் ஸேது ஸ்நாநம் செய்துவிட்டு வரும்படி நியமித்தருளினர். அந்த ஸ்வாமியும் ‘அப்படியே’ என்று சொல்லிப் புறப்பட்டுப் போனர். மறுதிநம் முதல் ஸ்ரீ அழகிய சிங்கருக்குத் திருமேனியில் தளர்ச்சி அதிகமாகி வருவதை யறிந்த ஸ்ரீ முஷ்ணம் ஸ்வர்ணம் ஸ்வாமி முதலான அநேகர் வந்து உபாயாநுஷ்டாநத்தை ப்ரார்த்தித்தார்கள். அப்படியே எல்லோருக்கும் உபாய பூர்த்தியு மாகிவிட்டது. இந்த ஸமயத்தில் ஸேது ஸ்நாநத்திற்கு வெகு தூரம் சென்ற திருக்குடந்தை ஸ்ரீ சக்ரவர்த்தி வேங்கடாசார்ய ஸ்வாமி ஸ்ரீ அழகியசிங்கருக்கு வரவர அஶக்தி யதிக மாவதையும், அநேகர் கட்கு உபாயாநுஷ்டாந மாகிவருவதையும் தந்தி மூலமா யறிந்து, ஸேது ஸ்நாநத்தைப் பார்த்தால் ப்ரதாநமான அம்ஶம் தலைக்காட்டாது என்று யோசித்து, ஸேதுவுக்குப் போகாமலே வேகமாகத் திரும்பிவந்து உபாயாநுஷ்டாநத்தைப் ப்ரார்த்திக்கவே, அதன்படி உத்திஷ்டா ரூபமான உபாயாநுஷ்டாநம் செய்விக்கப்பெற்று அவர் மநோரதமும் பூர்த்தியாயிற்று. மறுதிநமே ப்ரேஷமந்த்ரோபதேசத்தை ப்ரார்த்திக்க, அப்போதே அந்த ஸ்வாமிக்கும், இன்னம் ஸமீபத்திலிருந்த சில ஸ்வாமிகளுக்கும் ப்ரேஷமந்த்ரம் கிடைத்துவிட்டது. இப்படியிருக்குங் காலத்தில், தூரதேசத்தில் வஸித்துக்கொண்டு ஆஸ்திகர்களா யிருந்தும், “ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸஞ்சார க்ரமத்தில் நம்மூருக்கே எழுந்தருளப் போகிறன்; நம்மையும் கடாக்ஷிக்கப் போகிறன்; ஸ்ரீ அழகிய சிங்கருக்கும் அதிக திருநக்ஷத்ர மாகவில்லை; ஸ்ரீ ஸந்நிதிக்கு எழுந்தருளிப் பத்து மாதங்கள்கூட ஆகவில்லை. ஆகையால் இன்னும் கொஞ்ச காலம் போனல் நமக்கு ஶ்ரமமின்றியே நம்முடைய அபேக்ஷிதம் ஸித்திக்கும்” என்றிப்படி யெல்லாம் மநோரதித்துக்கொண்டிருந்த ஸ்வாமிகளில் சிலர், ஸுக்ருத விசேஷ பரிபாகம் வாய்ந்தவர்களாய் இவ்வ்ருத்தாந்தத்தைக்

2

கேட்டவுடனேயே திடீரென்று புறப்பட்டு ஓடிவந்து ஸ்ரீ அழகியசிங்கரிடத்தில் உபாயாநுஷ்டாநத்தை ப்ரார்த்தித்தார்கள். ஸ்ரீ அழகியசிங்கரும்

"யஸ்யாஶ்ரயோऽவஸந்நாநாம் தேஶாந்தரநிவாஸிநாம் |
உபதேஶ: க்ருதஸ்தேந நாராயணரதாத்மநாம் ||"

என்கிற ப்ரமாணப்படிக்கு வெகு பேர்களுக்கு உடனுக்குடன் உபாயாநுஷ்டாநத்தைச் செய்தருளினர்.

தன்னடிச் சோதிக்கு எழுந்தருளல்

இப்படி, தமக்கு ஜ்ஞாபகமும் சக்தியு மிருக்கும் வரையில் வெகு பேர்களை உஜ்ஜீவிக்கச் செய்து, சக்தி குறைந்து சயனித்திருக்கும் போதும் ப்ரபத்தி ப்ரயோக வாக்யங்களையும் பாதுகா ஸஹஸ்ர ஶ்லோகங்களையும் அநுஸந்தாநம் செய்துகொண்டே மூன்று நாள் பர்யந்தம் எழுந்தருளியிருந்து, ப்ரதீபத்துக்கு ஸ்நேஹக்ஷயத்தால் வரவர ப்ரகாஶம் குறைவதுபோல் ஜ்ஞாபக சக்தியும் குறையக் குறைய, ஒருவரும் கிட்டி மேல் நடக்கவேண்டிய கார்யங்களைப்பற்றி விஜ்ஞாபிக்க மாட்டாமல் எல்லோரும் ஶோகாக்ராந்தர்களாக நிற்கவே, ஸ்ரீ அழகியசிங்கரும் வேறு ஸ்வாமியை நியமிக்காமலேயே விகாரி௵ மார்கழிமீ பௌர்ணமீ திதியில் தன்னடிச் சோதிக்கு எழுந்தருளினர்.

அழகியசிங்கரின் நிர்யாணத்தா லுண்டான சோகம்

அவ்வருஷம் மழை யில்லாமையால் நரஸிம்ஹபுரத்திலும் அதைச் சேர்ந்த அக்கம்பக்கம் க்ராமங்களிலும் பயிர்கள் தொண்டை விக்கிக் கொண்டு சாவியாய்க் கிடந்தபடியாலும், அன்று க்ரஸ்தாஸ்த சந்த்ர க்ரஹண மாகையாலும், ஆபால வ்ருத்த ஜனங்களும் பட்டினியால் வாடிக் கிடந்தபடியாலும், ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் தண்டகாரண்யம் எழுந்தருளும் காலத்தில் மஹர்ஷியால்,

'க்ஷிதி வ்ருக்ஷா: வநிஶ்ராந்தா: ஸர்வேஷாம் காரகோரகா: |'

என்று வர்ணிக்கப்பட்ட தசை இங்கும் ஒத்திருந்தது அப்போது ஸ்ரீ அழகியசிங்கருக்குத் திருநக்ஷத்ரம் இரு மாதங்கள் குறைவாக ஐம்பத்தைந்து. இதில் ஆஸ்தாந நிர்வாஹத்திற்குமுன் ஸந்யாஸாஶ்ரமத்தில் இரண்டு சாதுர்மாஸ்யங்களும், ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளிய பின்பு ஒரு சாதுர்மாஸ்யமும் தான் நடந்தன. இப்படி இம் மஹாதேசிகன் ஆஸ்தாநத்திற்கு எழுந்தருள வேண்டுமென்ற பேராசையோடு,

"ஸர்வாந் தேவாந் நமஸ்யந்தி ராமஸ்யார்த்தே மநீஷிண:"

என்றபடி தேவதாந்தரங்களைக் கூட ப்ரார்த்தித்துக்கொண்டிருந்த காலம் பத்து வர்ஷங்களாயும் பலம் கிடைத்து அநுபவித்த காலம் பத்து மாதங்களாயும் ஆகிவிடவே, அபவர்க்கத்தில் உபாய தசையில்

காலம் ஸ்வல்பமாயும் பல தசையில் காலம் பஹுவாயு மிருக்க, ஸம்ஸார தசையில் அதற்கு வைபரீத்யத்தைக் கண்டு, இந்த ஸம்ஸாரத்தில் ஜுகுப்ஸை யுள்ளவர்களா யிருக்கிற ஆச்ரித ஜநங்களுடைய துரத்ருஷ்டத்தை நினைத்து, அடியேனுக் குண்டான சோகத்தால் கூநாவஜாத கவிதா ஶம்யனான அடியேனுடைய முகத்திலிருந்தும் இந்த ஶ்லோகங்கள் இரண்டும் வெளிவந்தன.

दुःखेऽस्मिन् दुष्टेऽहो जनेन कियता कालेन संवाहितं
रे दुर्बुद्धे कथं बहु व्यर्थं शोकं कृतायेष्वयना ।
येन ज्ञातः स एते विवेकसहिता कर्त्राश्रि विद्राश्रिता
शोकेन प्रभवेन संप्रति शिवं याते श्रीनां वरे ॥ 1

वेदः वेदार्थभोगो हि विहिता शोभिता साहितीसा
तर्कश्शास्त्रं प्राणतज नष्टनस्संशोधा निश्शोधोस्मि ।
शान्ता वेदान्तविद्या सज्जनि विकृतिं प्राकृतिः प्राप नष्टं
श्रीशैलवीरराघवीसंयनष्टन दृष्टः प्रयाते यतीन्द्राः ॥ 2

இப்படி ஸகல குணங்களும் பொருந்தி ஆத்ம குண பூயிஷ்டராய் எழுந்தருளியிருந்த நம் மஹானுடைய ப்ரபாவாதிஶயங்களை அஸூயாதி தோஷ திரோதாந மில்லாத கண்களால் கண்டவர்களுக்கு அந்த ஸ்வாமியினிடத்தில் விசேஷ ப்ரதிபத்திகள் உண்டாகாமல் போகா. இவ்வளவு குணங்களும் சிலருக்குத் தோஷமாகவும் தோன்றக்கூடும். அதற்குக் காரணம் மோஹாந்தம் தவிர வேறில்லை. இம்மாதிரி வ்யக்தி விசேஷங்க ளிருக்கக்கூடு மென்று திருவுள்ளம்பற்றியே ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனும்,

"पश्यति परदोषान् दोषानसतस्तोऽपि नैव जानातु ।
विपरीतं सृजति शिरो मोहान्धजनचेष्टितम् ॥"

என்று அருளிச்செய்திருக்கின்றார்.

"अहो बत महत्कष्टं विपरीतमिदं जगत् ।
येनापत्रपते साधुरसाधुस्तेन तुष्यति ॥"

என்று மஹர்ஷியும் நிர்வேதப்பட்டான். இந்த ஶ்லோகத்தை யடிக்கடி நம் ஸ்ரீ அழகியசிங்கர் அநுஸந்தித்துக் காட்டுவதுண்டு.

இதரர்களின் புகழ் மாலை

ஸ்ரீ அழகியசிங்கரின் ஜ்ஞாந வைராக்யாநுஷ்டாநங்களின் மாற்று அறிந்த சில மஹான்கள் [அந்ய ஸம்ப்ரதாய நிஷ்டர்களும் மதாந்தர நிஷ்டர்களு முட்படப்] புகழக்கேட்ட சில வார்த்தைகளுண்டு. இதற்கு இரண்டு வ்யக்தி விசேஷங்களை மாத்ரம் வெளியிட விரும்புகிறேன்.

(1) ஸ்ரீ அழகியசிங்கர் திருநாட்டை யலங்கரித்து அந்தக் கைங்கர்யங்களும் பூர்த்தி யடைந்தவுடனே அடியேன் இன்னும் சில ஸுஹ்ருத்துக்களுடன் நரஸிம்ஹபுரத்திலிருந்து புறப்பட்டு வலயப்பேட்டை வழியாகத் திருக்குடந்தை வரும் வழியில், வலயப் பேட்டையில் அப்போது எழுந்தருளியிருந்த நாவல்பாக்கம் பெரிய ஸ்வாமியைத் தண்டம் ஸமர்ப்பிக்க நேர்ந்தபோது, அந்த ஸ்வாமியின் முகாரவிந்தத்திலிருந்து வெளிக் கிளம்பிய இந்த ஸ்ரீ அழகிய சிங்கர் விஷயமான புகழ் மாலைகளின் வாஸனைகள் அடியேனுடைய ஹ்ருதயங்கமங்களாய்க் கொண்டு இன்னமும் அகலாமே பரிமளித்துக்கொண்டிருக்கின்றன. (2) திருவிசை நல்லூர் ப்ரஹ்ம ஸ்ரீ மஹாமஹோபாத்யாய ராமஸுப்பா சாஸ்த்ரிகளை அடியேன் ஒரு ஸமயம் பார்க்க நேர்ந்தபோது, அவர் நம் அழகிய சிங்கரின் ஜ்ஞாந வைராக்யாநுஷ்டாநங்களைப் புகழ்ந்து, இப்படி விரக்தாக்ரேஸரரான மஹான் அந்த ஆஸ்தாநத்தை அலங்கரித்த விசேஷத்தையும், உடனே திருநாட்டை யலங்கரித்ததையும் பற்றி அங்கே யிருந்த பண்டித பாமரர்கள் எல்லோருக்கும் ஹர்ஷ சோகங்களுண்டாகும்படி சில வார்த்தைகள் சொல்லிச் சோகித்தார். இப்படி மஹா விரக்தர்களாலும் மஹா பண்டிதர்களாலும் புகழப்படக் கூடிய அநேக கல்யாண குணங்களில் இங்கு ஸ்வல்ப பாகத்தையே எடுத்துரைத்திருக்கிறேன். இக்குணங்களில் ஒவ்வொன்றையும் விரிவாகச் சொல்லப் போனல் க்ரந்தம் விஸ்தரிக்கு மாகையால், இம்மஹா தேசிகனுடைய குணங்களில் சில குணங்களே இங்கு எடுத்துரைக்கப் பட்டிருக்கின்றன.

முடிவுரை

இப்படியாக: ஆசார்யகுண பௌஷ்கல்யமுள்ள ஓர் ஆசார்யரத்ந விஷயமான சரித்ரத்தை எழுதும்படி சிலர் நியமிக்க, அந்த நியமநத்தின் பேரில் எழுதப்பட்ட இந்த சரித்ரத்தில் சிற்சில குறைகள் இருந்தபோதிலும், ஸத்வஸ்து புருஷ பஹுமாநத்தால் அக்குறைகளில் த்ருஷ்டியைச் செலுத்தாமல் விஷயத்தில் பஹுமதியைச் செலுத்தி, அடியேனுடைய அபராதங்களை க்ஷமித்து ஸந்தோஷிக்கும்படி பஹுஜ்ஞர்களை ப்ரார்த்திக்கிறேன்.

𑌉𑌕𑍍𑌤𑌂 𑌵𑍀𑌰𑌰𑌾𑌘𑌵𑍋𑌕𑍍𑌤𑌂𑌸 𑌸𑌂𑌜𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌦𑌿𑌵𑍈𑌭𑌵𑌃 ।
𑌶𑍁𑌭𑌂 𑌶𑍍𑌰𑍀𑌶𑍈𑌲𑍇𑌶𑌧𑌾𑌮𑍇𑌶𑍇𑌨 𑌸𑌂𑌗𑍃𑌹𑍍𑌯𑌤 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍇 ॥

இவ்வழகிய சிங்கரின் திருநக்ஷத்ரம்—மாசி மீ புஷ்ய நக்ஷத்ரம்.

ஆராதந திநம்—மார்கழி பௌர்ணமீ.

பூர்வாஶ்ரமத் தனியன்—

𑌵𑌨𑍍𑌦𑍇 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌃 𑌸𑌂𑌯𑌮𑌿𑌸𑌂𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑍁𑌣𑌾𑌹𑍍𑌵𑌯𑌂 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌧𑌿𑌹𑍍𑌵𑌯𑌂
𑌶𑍍𑌰𑍀𑌶𑍈𑌲𑍇𑌶𑍍𑌵𑌯𑌂 𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯 𑌶𑍀𑌲𑌂 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌾𑌰𑍍𑌯𑌮 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌘𑌵𑌾𑌰𑍍𑌯𑌾
𑌯𑍈𑌤𑍍𑌯 ।

விக்யாதம் ஶ்ருததேஜ கணவரணகயாதிஷ்டிஜகும் ஶமாதி
க்ஷீராப்திம் களஶிகஸ்ரீரவாவரதநயம் நௌமி கோபாலாரவஸமிதிம் ॥

ஸங்யாஸாஶ்ரமத் தனியன்—

ஶ்ரீமத்தேவேஶதேஶிகோ வ்யதிஶேஷோ பாலயதி ஶடஜித்க்ருஷ்ணாக்யோ மஹிமா
ரகீஹரியோதிதாக்யா மஹிவ நிரவயிகம் வேக்ஷிதம் ஸத்ராராக்யாம் ।
வேதாந்தயம் யதீந்த்ரத்ரயவித்யதிமாவை ஶிக்ஷிதம் க்ஷாந்திமாவைவ்
ராஜ்யம் ஸ்ரீவீரராகவஸ்வயம் நமாமம் ஸம்யமீந்த்ரம் நமாமி ॥ 1

ஸ்ரீஶடாராதிஶடாராதி ராமாநுஜபதாஶ்ரயம் ।
வ்யாதம் ஸ்ரீவீரராகவஶடாரி மாநிமாஶ்ரயே ॥ 2

ஶடாரிராமாவரஜபாதாப்ஜாவாரிவாரிணே ।
ஸ்ரீமத்வீரராகவாக்யம் ஸஶடாரிமுநயே நம: ॥ 3

இவ்வழகியசிங்கரின் சரம ஶ்லோகம்—

ஶுபே நாம்நா விகாரிண்யப்தே ஸதிய நவராஶிமஹாமயே
ராகாயாம் ஹாநவ்வ நாரஹநிமஹிமகராயுக்ஷநக்ஷத்ரயாதே ।
தத்தாத்ரப்ராப்திஶாஸ்த்ராத்யவிய மாணநிபிஜ்ஞா நவிஜ்ஞா நஸிம்யா:
வ்ராமாஸ ஸ்ரீவீரராகவ ஶடாரிவயதிராட் ந்ருஸிம்ஹாம்வித்ரயாஸ்ம் ॥

விகாயலுப்தே வாவமாஸி ராகாயாம் மதுவாஸரே ।
வீரராகவஶடஜித்தேவ்யாமீம் த்ராட்மாத்ரம் பதம் ॥

ஸ்வாமி அருளிச்செய்த க்ரந்தங்கள்—

1 ஸ்ரீதேஶமணி: ஸவ்யாக்யா
2. ஸ்ரீதேஶகளஷ்டாஹ:
3. ஸ்ரீபாயலுஸ்ஷதி:
4. வேஷ்டவலுணம்
5. வாததரங்கிணீ
6. யதிராஜஹோம:
7. யஜ்ஞப்ரகாஶ:
8. தத்த்ரதாந்யாயஸார:
9. தத்த்ரதாந்யாயபாஷகம்
10. ந்யாயஸித்தாஞ்ஜநஸம்ரம்ய:
11. தாஸதாஸீஸமயலுநம்
12. மகாரரக்ஷா
13. ஸ்ருங்காரம் மணிலுய:
14. ஸ்ரீபாஷ்யவாக்யமலுாஹ்யநுஜ்ஞா
15. தாராயலுஸார:
16. தாராயலுஸாரவ்யூஹா
17. ஸ்ரீவண்ஶடகோபயதீந்த்ர-மஹாதேஶிகவைபவப்ரகாஶிகா
18. த்ரிஸ்தவீ
19. வேதாந்ததேஶிகவைபவ-ப்ரகாஶிகா
20. ஸ்ருதிகீதாவ்யாக்யாநம்
21. சமலுஜவம்வகம்
22. ஶாரீரகஸாவ்யூஹாதம்
23. வேதாந்தகளஷ்டஹஸார:
24. பட்டாபிஷேகஸ்ரீமாலம்
25. வேதாந்ததேஶிகோத்ஸவ-மாலிகா
26. கோதாஸ்ரீநாயஸ்தவ:

மற்றும் பல க்ரந்தங்களும் உண்டு. தெரிந்த வரையில் ஸங்க்ரஹிக்கப்பட்டன.

முற்றிற்று

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

மைஸூரும் மாதவனும்

[ஸ்ரீ உப. S. T. ஸ்ரீநிவாஸாசாரியர் M.A.,L.T. வித்வான், திருவையாறு]

ஹோய்ஸள மன்னனான விட்டலதேவராயனது ஸபாமண்டபத்தில் நாட்டிலுள்ள ப்ரதாந சமண குருக்கள் கூடியிருந்தனர். வெகு அழகான வேலைப்பாடமைந்த பொன் கால்கள் தாங்கிய விதாநத்தின் கீழ் இரு புறமும் பணிப் பெண்கள் கவரி வீச, உருவிய கத்தியுங் கையுமாய் வீரர் மெய் காக்க மன்னன் வீற்றிருந்தான். படிக்கட்டின்கீழ் முதல் ஆஸநத்தில் நீண்ட காவி அங்கி தரித்துக் கையில் மயிற்பீலிக் கட்டுப் பிடித்திருந்த ஒரு துறவி வீற்றிருந்தான். பக்கலில் விலையுயர்ந்த ஆஸநங்களில் நாட்டின் பெருமக்களாகிய சமண ப்ரபுக்கள் வீற்றிருந்தனர். யாவரும் முதல் ஆஸநத்தில் உட்கார்ந்திருந்த துறவியின் முகத்தைப் பயபக்தியுடன் நோக்கிக்கொண்டிருந்தனர். துறவி எழுந்தார். அவர் கண்களில் கோபம் ஜ்வலித்தது. "ராஜனே! உனக்கு வந்துற்ற இன்னலை நீ நினைத்தாயில்லை. சிறுகச் சிறுக நம் சமணரில் கற்றவரும் கல்லாதவரும் ஏழையும் ஸ்ரீமான்களுமாகிய பல்லாயிரவர், இந்தப் புதிய கீழ்நாட்டுத் துறவியின் வைணவத்திற்கு வசப்பட்டனர். இனிச் சமணர் அரசு ஒழிந்தது. இந்த ப்ராந்தத்தில் விஷ்ணுதேவனது புகழே நிலைக்கும்போல் ஆய்விட்டது. உடனே அத்துறவியை யழைத்து நீ விசாரிக்கவேண்டும். தர்மம் லோபிக்கும். நம் ஸங்கம் ஒழியும். என்ன ஆயாஸ காலம்! அம்முரடனை அரசனது ஏவலாளர்களாற் பிடித்துவரச்செய்து, மணிபத்ர மஹாமண்டபத்தில் இருக்கச் செய்திருக்கிறேன். இந்தக் கலகக்காரனை நாட்டிற் கதிபதியாகிய நீ விசாரி" என்று சொல்லி உட்கார்ந்தார். ஸபா மண்டபத்தில் பல்லாயிரக் கணக்காய் ஜனங்கள் கூடியிருந்தனர். 'கொண்டுவா அத்துறவியை' என்றார் சிலர். 'அவனை அடித்து விரட்டுங்கள்' என்றார் மற்றும் சிலர். 'கல்லைக் கட்டிக் குளம் நதிகளில் தள்ளுங்கள்' என்றார் வேறு சிலர். உள்ளே குழப்ப முண்டாயிற்று. 'தாரி பிடி! தாரி பிடி!' (வழி விடுங்கள்) என்ற ராஜபுருஷரது உரத்தசப்தம் கேட்டது. பத்துப் பதினைந்து ராஜ புருஷர் ஒரு வைஷ்ணவ யதியையும் சில வைஷ்ணவர்களையும் உள்ளே அழைத்துவந்தனர். விட்டல தேவராயன் அவரைப் பார்த்தான். அவன் தலையிலிருந்து கால்வரையில் நடுங்கினான். 'இந்தத் தயாமூர்த்தியை - சாந்த நிதியை - தேஜோராசியை - அஞ்சாத ஸிம்ஹத்தையோ, துறவி கலஹக்கார னென்றது' என்று சலங்கினான். என்ன முகம்! என்ன காம்பீர்யம்! என்ன கண்கள்! என்ன கருணை! விட்டலராயன் நடுங்கினான். ஆயினும் அதிகாரத்தை ரக்ஷிக்கவேண்டிய முறையில், "துறவியே! நீர் நம் நாட்டில் உமது நூதந ஸித்தாந்தத்தைப் பரப்பி

நம் சமண மக்களை எல்லையில்லாது உமது மார்க்கத்தில் சேர்த்துக்கொண்டீரா?'' என்றான். அவன் மனம் கலங்கியது. தன் குருவான ஜீவஸித்தி மிகவும் சுயநலமும் காமக்ரோதமும் உடையவனாய் நாட்டில் எல்லையற்ற அட்டூழியங்கள் செய்துவந்தான் என்பது அவனுக்குத் தெரியும். ஜனங்களுக்கும் அவனிடம் வெறுப்பும் சலிப்பும் ஏற்பட்டதும் அவன் அறிவான். ஆயினும் அவனது சிறந்த அறிவிற்கும் உயர்ந்த நூற்பயிற்சிக்கும் வசமாகி அவனைப் போற்றி வந்தான். சமணர் தொகை குறைந்தால் ஜீவஸித்தியின் செல்வாக்கும் திருவும் போய்விடும் என்பதனாலேயே அவன் பயந்தான் என்று அரசன் ஊஹித்தான். தன் எதிரில் நிற்பவர் யாராயிருப்பினும் ஓர் கலகக்காரனல்ல என்பதை மாத்திரம் உணர்ந்தான். அவரை நேரில் பார்க்கவும் கூசினான்.

"குரு ராஜன் சொல்லியது கேட்டீரா அது நிஜமா''? அழகிய அந்தத் துறவியின் முகம் நாற்புறமும் நோக்கியது. கருணை வெள்ள மிடுங் கண்களைக் கண்டு சமண மக்கள் வியந்தனர்.

"இவர் ஓர் தீர்த்த புருஷனே!'' என்றார் சிலர். "நம் ஜிநேந்த்ரனது முகம் போலிருக்கிறது. பிட்டலதுர்க்கத்துக் கோயிலில் நிற்கும் ஜிநராஜனின் முகம் இப்படியே விளங்குகிறது'' என்றான் ஒருவன்.

ராஜனை அஞ்சாது நோக்கி எல்லையற்ற மென்மையுடன் த்ரிதண்டதாரியான துறவி, "ஆமாம் ஸித்தாந்தத்தை உபதேசித்தது உண்மையே; ஆனால் அது புதிதல்ல; ஸநாதநம்'' என்றார். இவருடைய தைர்யத்தைக் கண்ட மன்னன் வியந்தான். ராஜகுரு சீற்றத்துடன் எழுந்து "அரசே! நம்மைப் படைத்து அளித்து அழிப்பவன் திருமாலென்றும், நம் கடவுளர் எல்லாம் கடவுளரல்லரென்றும், அவர்களால் நம் ஆத்மாவுக்கு யாதொரு ஹிதமும் செய்யமுடியாதென்றும், குப்தகிரியில் இவன் பேசினானாம்; உண்மையா கேளுங்கள்!'' என்றான். ஸபையில் யாவரும் அமைதியாயினர்.

"நம் தீர்த்தங்கரர்கள் ஸர்வ ரக்ஷகரல்லவா? ஜிநேந்த்ரன் ஸர்வோத்தாரகனல்லவா?............'' என்றான் மன்னன்.

முனிவரின் முகம் புன்னகை பூண்டது. சாந்தி தாண்டவமாடியது. அவர் நோக்கில் அன்பு கொழித்தது. "மன்னா! சராசரங்களைத் தன் நினைவினால் உண்டுபண்ணி, அவற்றைத் தக்கவாறு அளித்துப் பின் ப்ரளயாபத்தில் அவற்றைத் தன் திருவுதரத்தில் சேர்க்கும் தயாஸமுத்ரமான ஸர்வேச்வரன் ஸ்ரிய:பதியே. ப்ரம்ஹாதி ஸ்தாவர பர்யந்தமான கார்யவர்க்கம் அவன் படைப்பே. இது இன்று நேற்று பேசப்படும் புதிய மதமல்ல. அநந்தனுக்கும் நமக்கும் உள்ள உறவு—ஸ்வஸ்வாமி பாவம் நித்யமானது. சமணனாயினும் சாக்கியனாயினும் யாவனாயினும் அவனுடைய அருளுக்கு இலக்காகப் பாத்யமுள்ளவனே. அதை இழப்பவன் அந்தனே. கருணா வடிவமான அவனது ப்ரஸரித்துக்கொழிக்கும் அருளை விலக்கிப் பிறந்து பிறந்து உழலும் ஜீவராசிகளைக் கடவுள் என்று கொள்

எப்போமோ? "ஸ்வயம் தரிதுஃக்ஷை கதம்ஸேநா பராந்தாரயேத்" என்றபடி, தன் நோயைத் தீர்க்க அறியாத அவர்கள் பாவம்!—இத்தனை ஆயிரம் ஜீவராசிகளுக்கு என்ன செய்ய முடியும்?" மன்னன் மனத்தில் அவர் வார்த்தைகள் பதிந்தன. "துறவியே! முனிவரும் கற்றோருமாகிய சிறந்த அறிவாளிகளே தத்வஞானத்தால் அடையும் மோக்ஷத்தை நீர் எளிதில் திருமால் திருவடியைப்பற்றிப் பெறலாம் என்றது உண்மையா?" என்றான். த்ரிதண்டதாரியான முனிவர் பெருமான் புன்னகையுடன் "ஆம் மன்னா! சிறந்த அறிவு தேவையில்லை. திருமாலே ரக்ஷகன் என்ற துணிவே போதும். காகாஸுரன் போன்ற பாவியரும் அவன் சரணாரவிந்தத்தைப் பற்றிப் பிழைத்தனர். இதை நீர் அறியீரா? துறவிகள் தான் மோக்ஷமடைவது என்பதில்லை. அந்தணர்—அந்தியர், சமணர்—சாக்கியர், பாலர்—வ்ருத்தர் யாவரும் திருமாலைப் பற்றி, மோக்ஷம் அடையத் தக்கவரே." ஜைனரிடை ஆரவாரம் எழுந்தது. "புதிய மதம்!! புதிய மதம்!! காயக்லேஶம் செய்து காஷாய முடுத்த துறவி முத்தியடைவதல்லால், ஸாமாந்ய மனிதர் எப்படிச் சிறந்த அறிவின்றி—ஜிநராஜனது சரண ஸேவையன்றி—மோக்ஷமடைய முடியும்? பிடியுங்கள்! அடியுங்கள்!" என்ற இரைச்சல் எழுந்தது. அரசனது படர்கள் ஸூம்மனிரி—ஸூம்மனிரி (சற்றுப் பேசாமலிருங்கள்) என்று கூச்சலிட்டனர். முநிஸார்வபௌமன் ஆரம்பித்தார்.

"புதிய மதமல்ல. இத்திருமால் தாள் பற்ற எத்தனையோ சோதனை வரும். எத்தனையோ அவமானம் வரும். அதற்கு அஞ்சாது நாம் வைணவரென்று வாழ்வாரே ஆநந்த மடைவார். ஸ்ரீமந் நாராயண! ஸ்ரீமந் நாராயண!" என்று சொல்லித் துறவி மறுபடியும் நாற்புறமும் பார்த்தார். ராஜகுரு எழுந்தான். "க்ஷணே க்ஷணே அழிந்து மாறக் கூடிய இந்த உலகத்தை இவனது ஸித்தாந்தம் தத்வமாகவே பேசும். உயர்ந்த காய க்லேஶாதி வ்ரதங்களே மோக்ஷ ஸாதநம்" என, நம் முனிவர் புன்சிரிப்புடன் "வெகு நேரம் வாதாடிப் பேசி வரும் நாம், ஒரு தேசத்தில் ஒரு கால ஸந்ததியில் ஒரே விஷயத்தைத் தொடர்ந்து பேச முடிவதால், க்ஷணே க்ஷணே உலகம் மாறுவது என்பதெல்லாம் நிஜமாக மாட்டாது. காய க்லேசத்தினால் ஜந்ம மரணங்கள் ஒழியா. ஸர்வேஶ்வரனான ஶ்ரிய:பதியின் கருணையே தாரகம்" என்றார். ராஜகுரு கண்களில் நெருப்புப் பொறி பறப்பதுபோல் சீற்றம் கொண்டான். "உன் கடவுளும் உன் தொண்டும் உண்மையானால் எங்கள் அரசனது மகளான அநங்கலேகையைப் பிடித்துள்ள பிசாசை ஓட்டி விடு பார்ப்போம்" என்றான். முநிவரன் ஓர் அத்புதமான ஹாஸம் செய்தான். "ஸர்வேஶ்வரன் இருப்பது இந்தச் சிறு க்ரியா விசேஷத்தில் ஜயாபஜயத்தையா பொறுத்தது? நம்மிடர் போக்கினால் கடவுள்; இல்லாவிடில் இல்லையோ?" அக்நிக்கு எதிரில் நின்று "நான் மநுஷ்யனானால் என்னைச் சுடாதே" என்று சொல்லிப் பார். நீ மநுஷ்யனாய்

இருப்பதால் அக்நி உடனே கை நீட்டின் சுடாது விடுமோ? ஆகையால் வஸ்துக்களின் உண்மை சபதங்களால் ஸ்தாபிக்கப்படமாட்டாது. 'உங்கள் ஜிநதேவன் மெய்க் கடவுளாயின் இப்பொழுது மழை பெய்ய வேண்டும்' என்று நான் உங்களைச் சபதம் கேட்கலாமா? மழை அகாலத்தில்கேட்டுப் பெய்யச்செய்தால்தான் கடவுளா? அல்லது அப்படி மழையைப் பிறர் பெய்யும்படி செய்ய முடியாதா? எத்தனை ஸித்தர்கள் ஆஸ்சர்ய சக்தியுடையவரா யிருக்கிறார்கள்? அவர்க ளெல்லாம் ஜகத் காரணமான ஸர்வேஸ்வரனா? விஸ்வாமித்ரன் புதிய லோகங்களை ஸ்ருஷ்டி பண்ணவில்லையா? ஆக: ஸர்வேஸ்வரனது திவ்யநாமத்தை இந்த வீண் வேலைகளுக்கு உபயோகப்படுத்துவார்களா? 'நீ ஸர்வேஸ்வரனாகில் இந்த மண்டபம் நடக்கவேண்டும்; பேசவேண்டும்' என்று இப்படி விநோதமாய் யாரேனும் சோதிக்கலாமா? அது அஸஹ்யாபசார மல்லவா?"

இவர் இப்படிப் பேச, சமணர் யாவரும் உரக்கச் சிரித்தனர். மந்த்ரவாதிகளையும் மாய சக்தியுடையவரையும் குருவாகப் போற்றும் அன்னவர் நந்துறவியின் வார்த்தையைக் கேட்டு 'இவன் அஞ்சுகிறான்' என நகைத்தனர். சிலர் 'இந்த ஸாரமற்ற யோகி வேஷக்காரனைக் கட்டி அடியுங்கள்' என்று கூச்சலிட்டனர். துறவி அஞ்சாது நின்றார். அவர் பாலன்ன மேனியும், த்வாதச புண்ட்ரமும், காஷாய வாடையும், கலங்கா நெஞ்சமும், கண்டவர் வியக்கும் கருணாவடிவாக விளங்கினார். மன்னனுக்கு முனிவர் பேசிய அழகிய வார்த்தைகள் மிகவும் பொருத்தமாயும் பதியத்தக்கவையாயும் இருந்தன. முனிவரைப் பார்த்து, 'ஆயின் நீர் நம் ராஜகுமாரியின் நோயைத் தீர்க்க முடியாதா?' என்றான். துறவி கம்பீரமாய்த் தலை தூக்கி "அரசே! அல்ப சக்தனான நான் ஒரு கார்யம் செய்து அதின் ஜயாபஜயமானது ஸர்வ சக்தனது இருப்பையோ இன்மையையோ வெளிப்படுத்துமா? அதற்காக நீ பரிக்ஷிப்பதானால் நான் ஒப்பமாட்டேன். ஆயினும் பரம கருணாநிதியான அவனை யார் மனங்கசிந்து விஸ்வாஸத்துடன் வேண்டுகிறார்களோ, அவர் விரும்பியதைக் கொடுப்பான். கவலைப்பட வேண்டாம். ராஜகுமாரியின் நோய் தீர அவனது திவ்ய ஸங்கல்பம் இருப்பின் நிச்சயம் நோய் தீரும். அவனது திவ்ய ஸங்கல்பமே காரணம்." இதற்குள் ஒரே குழப்பமாயிற்று. 'ராஜகுமாரி! ராஜகுமாரி!' என்று யாவரும் உரக்கக் கத்தினர். தலையெல்லாம் அலங்கோலமாய் விரிந்து கிடக்க, வஸ்த்ரங்கள் சிதைந்து வீழ, விழிகள் சூந்யமாய் மருண்டு ஆகாசத்தை நோக்க, ராஜகுமாரி காவலிலிருந்த ஸகிகளை நீக்கி ஓடிவந்தாள். ராஜகுரு எழுந்து 'நில்; வராதே! நில்' என்றான். ஜனங்கள் வழிவிட, ராஜகுமாரி அரசன் முன் ஓடி வந்தாள். சிரித்தாள்; கைகளைத் தூக்கிக் குதித்தாள்; ராஜகுருவை அடிக்க ஓடினாள். பெண்களிற் பலர் அவளைப் பற்றி அந்தப்புரத்திற்கு அழைத்துச் செல்ல ஆரம்பித்தனர். த்ரிதண்டதாரரான துறவி 'குழந்தாய்!' என்றார். ராஜபுத்ரி திடுக்கிட்டவள்போல் நின்றாள். அவள் கண்

கள் சுழன்றன. அரசன் கவலையுடன் கவனித்தான். 'குழந்தாய்!' என்றார் துறவி. அவர் உதடு துடித்தது. அவரது கண்கள் த்யானத்தில் மூடின. ராஜபுத்ரி அவரை நன்கு நோக்கினாள். சிரித்தாள். உடல் நடுங்கினாள். "குழந்தாய்! ஸர்வேஸ்வரனான ஸ்ரிய:பதியின் கருணை மூடரை ப்ருஹஸ்பதியாக்கும். வ்ருத்தரைத் தருணராக்கும். ஏழையைக் குபேரனாக்கும். மண்ணில் புரண்டழுதவனை விண்ணில் செங்கோல் செலுத்தச் செய்யும். குழந்தாய்! குறையொன்றுமில்லாத அக்கோவிந்தன் சரணாரவிந்த ஸேவைக்காக நீ ஶக்தையாய் ஶாந்தையாய் விநீதையாய் நட" என்றார். ஸபா மண்டபத்தின் ஓரத்திலுள்ள மாடியிலிருந்து பல்லாயிரம் மக்கள் வேடிக்கை பார்க்கின்றனர். ராஜபுத்ரி மூர்ச்சையாய்க் கீழே விழுந்தாள். அவள் வாயில் 'கோவிந்தா' என்ற சப்தம் எழுந்தது. பல வருஷங்கள் சாக்கியரும் சமணரும் யாவரும் சிகித்ஸை செய்தும் ரோகம் தீராத ராஜபுத்ரி 'கோவிந்தா' என்றாள். மூர்ச்சை தெளிந்து எழுந்தவள் லஜ்ஜையுற்றாள். ஸகிகளுடன் அந்தப்புரம் ஓடினாள். ஜனங்கள் 'ஆச்சர்யம்! ஆச்சர்யம்!' என்றார்கள். சமணர்கள் வியந்தார்கள். அரண்மனையிலிருந்து ஒரு தாதி ஓடிவந்து "அரசே! பல வருஷங்களாயில்லாமல் ராஜபுத்ரி ஸ்நாநம் செய்து நல்ல சேலைகளை உடுத்தி அமைதியாய் உட்கார்ந்திருக்கிறாள். அதி விநயமாய்ப் பேசுகிறாள். முனிவரைப் பார்க்க விரும்புகிறாள்" என்றாள்.

அந்தப்புரத்தில் ஸ்ரீ ராமாநுஜ முனிவரின் சரணாரவிந்தங்களில் விட்டல் தேவராயன் பணிந்து நின்றான். அவன் பக்கலில் அவனது தேவியான கநகமாலையும் நின்றாள். மன்னன் "ஸ்வாமி! க்ருபாஸிந்தோ! அஜ்ஞாந இருளில் உழலும் என்னைத் தேடி எனக்கு ஐஹிக ஆமுஷ்மிக ஆநந்தத்தைத் தந்தருளிய தர்ம ஸ்வரூபமே! என் ராஜ்யமும் ப்ரஜைகளும் நும் அடைக்கலம்; எல்லாம் உம் பெருமை" என்று கண்ணீர் உதிர்த்தான். முநிபுங்கவன் புன்னகையுடன் "மன்னா! எல்லாம் ஸ்ரீமந் நாராயணன் ஸங்கல்பம். இந்த மைஸூர் நாடே மாதவன் பாதம் வழிபட அவன் திருவுள்ளம் போலும். மன்னா! உன் பெயர் விஷ்ணுவர்த்தநன் என ஆகுக. உன் தேவியின் பெயர் பத்மவல்லி; உன் ப்ரியபுத்ரி யதுகிரி நாயகி" என்றார். அம்மூவரின் நெற்றியில் ஹரி ஸமயத்தவரது புண்ட்ர சிந்நம் மிளிர்ந்தது. மறுநாள் ஸபை கூடியது. ராமாநுஜன் விஷ்ணுவர்த்தநனது பக்கத்தில் உட்கார்ந்தான். சமணத் துறவிகளும் மக்களும் கூடி நின்றனர். விஷ்ணுவர்த்தநன் "ப்ரஜைகளே! நமது கருணைகுரு விவரித்த ஸ்ரீ வைஷ்ணவ ஸமயமே நமது ஸமயமாகும். நாமரூபாசாரங்களால் நாம் ஹரி ஸமயத்தைக் கோரினோம்" என்றான். சற்றுநேரம் ஸ்ரீ ராமாநுஜரைப் பார்த்தான். பிறகு உரத்த குரலில் "சமணராகிய நீங்கள் இனி நம் நாடு நகரங்களில் நிம்மதியாய் வாழமாட்டீர்கள். கலகம் விளைப்பீர்கள். ஆகையால் பத்ரகிரிக்குச் சென்று அங்குக் குகைகளிற் பொழுது போக்குங்கள்" என்றான். பாமர மக்களிற் பல்லாயிரவர், "நாங்கள் அரசன் வழியே விரும்பினோம். அரசனெவ்

வழி குடிக ளவ்வழி. திருமால் மதத்தைப் பற்றினேம். இம்முனிவர் பெருமான் எங்கள் புஜங்களில் திருமாலது சிந்நங்களைப் பொறிக் கட்டும்'' என்று கூச்சலிட்டனர். அரசன் உடனே படர்களிடம் "இந்த ஜீவஸித்தி நம் ராமாநுஜனுக்கு அநுகூலனல்லன்; இவனை......." என்பதற்குள் மக்களெல்லாம் 'காட்டிற்கு விரட்டுங்கள்; புதிய குருவே தெய்விக குரு; மித்யாசாரனைக் கட்டி அடியுங்கள்; கொல்லுங்கள்' என்றார்கள். ஜீவஸித்தி நடுங்கினன்; தன் உயிர் போய்விட்டதெனவே உணர்ந்தான். ராமாநுஜ முனிவன் "அரசே! இந்த ஜீவஸித்தியை என்னிடம் ஒப்புவி; நான் தக்க தண்டனை விதிக்கவேண்டும்'' என்றார். ஜனங்கள் "இவன் காமி; மித்யாசாரன்; அரசனைத் துன்புறுத்தி மக்களையும் நலிந்தான்'' என, தடால் தடாலென்று அவன் பேரில் கற்கள் விழுந்தன. அவனது முண்டித சிரஸ்ஸில் விழுந்த ஒரு கல்லினல் அவன் உடலில் ரத்தம் சொரிந்தது. 'நில்லுங்கள் நில்லுங்கள்' என்று கர்ஜித்தார் முனிவர். ஜனங்கள் நின்றனர். ராமாநுஜன் ஜீவஸித்தியை வெளியே அழைத்துப் போனர். தூக்குத் தண்டனையோ, மலையிலிருந்து தள்ளப்படுவதோ தண்டனை என்று ஜீவஸித்தி துணிந்தான். ராமாநுஜன் பேசாது நடந்தார். த்வார ஸமுத்ர அரண்மனை வாயில் வந்தவுடன் தன்னுடன் நடந்து வந்த அரசனை நோக்கி "மன்ன! ஜீவஸித்தியை உன் ஆட்களை அனுப்பி க்ஷேமமாக வீட்டுக் கனுப்பு. அவர் சிறந்த ஞானி. ஶ்ரியঃபதி என்றைக்கும் க்ருபை செய்வான். அவருக்கு ஒரு ஹானியு மில்லாமல் அனுப்பு'' என்றார். ஆஶ்சர்யத்துடன் மன்னவன் முனிவரைப் பார்த்தான். அதிக ஆஶ்சரியத்துடன் ஜீவஸித்தி அவரை நோக்கி, "உங்கள் ஶத்ருவான என்னை விடுதலை செய்கிறீர்களா என்ன?'' என்று கேட்டான். முனிவர் சிரித்தார். "ஜீவஸித்தி! ஶ்ரீ காந்தன் உன் ஜீவஸித்தியைத் தருவானக. வைஷ்ணவன் உள்ளத்தில் கோபம் தாபம் இவை வரக்கூடாது. வைஷ்ணவனுக்கு சத்ருவே கிடையாது. விஷ்ணு ஸர்வசேஷி. அவனது விபூதியில் யாரிடமும் நிஜ வைஷ்ணவன் சாத்ரவம் பாராட்டான். ஸர்வ பூத தயையே வைஷ்ணவ லக்ஷணம். ப்ரஹ்லாதன், ஆழ்வார்கள், ஆசார்யர்களே உதாரணம்'' என்றார். மன்னன் மனம் உருகினன். அவன் கண்களில் நீர் பெருகியது. "ஜீவஸித்தி! உன் பேச்சைக் கேட்டு இந்த ராஜ்யத்தை வெகுவாகக் கலக்கினேன். உன் சூழ்ச்சிகள் பல. நீ ஜாக்ரதையாய் ஒடிப் பிழை. குருவின் ஆஜ்ஞையால் உன்னை ஒன்றும் செய்ய முடியாதவனனேன். இங்கு இருந்தால் இவர்க்கு ஏதேனும் க்ஷோபமே விளைவிப்பாய்'' என்றான். ஜீவஸித்தி ஸ்தம்பித்து நின்றான். ராமாநுஜ முனிவரை ஆபாத சூடம் நோக்கினன்; திகைத்தான். அவன் கண்களிலும் ஏதோ கலக்கம் காணப்பட்டது. ஒரு சிறு வேலை இவர் விஷயத்தில் நான் செய்யவேண்டியது உளது. 'ஹோ' என்றான். பக்கத்திலிருந்து முப்பது நாற்பது சமணக் குருமார் ஒடி வந்தனர். அரசன் வாளில் கைவைக்க ஆரம்பித்தான். ஜீவஸித்தி,

'அரசே! இவர் விஷயத்தில் நான் செய்யவேண்டிய வேலையொன்றுண்டு' என, அரசன் பயந்து மெய்க்காவலரை நோக்க ஆரம்பித்தான். ஜீவஸித்தி ஆரம்பித்தான். "அரசே! நான் இவருக்குச் செய்யவேண்டிய சிறு வேலை........." என, அரசன் கோபத்துடன், 'அது யாதாகும் சொல். இல்லாவிடில் உன்னை இங்கேயே வெட்டி வீழ்த்துவேன்' என்றான். ஜீவஸித்தி தடாலென ஸ்ரீ ராமாநுஜரின் சரணாரவிந்தத்தில் வீழ்ந்தான். 'சரணம் தயாஸிந்தோ! உம் ஆஸ்சர்யமான மதத்தை அடியேன் ஸபரிவாரமாய்ப் பின்பற்றினேன். இதுவே நான் செய்யவேண்டிய வேலை' என்றான். உடனிருந்த குருக்களும் ஒக்க வணங்கினர். மன்னன் மகிழ்ந்தான். 'யதுகிரி நாதனின் க்ருபை' என்றான். பாலரும் வ்ருத்தரும், ஏழையும் ஸ்ரீமான்களும், சமணரும் சாக்கியரும், அந்த த்ரிஜகத் புண்யமான த்ரிதண்டஹஸ்தரை வணங்கி ஜந்ம ஸாபல்யம் பெற்றார்கள். ஜீவஸித்தி முரஹர தாஸரானான். அவனது மடம் ராமாநுஜகூட மாயிற்று. அவன் உதவியால் பத்ரகிரியில் வாழ்ந்த பல்லாயிரம் ஆஜீவகத் துறவிகளும் ஸ்ரீ வைஷ்ணவராயினர். மைஸூர் நாடு மாதவனது நாடாயிற்று.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

ஸ்வபாநு௵ கார்த்திகை மீ

1௳ செவ்வாய்க்கிழமை	—	வ்ருஸ்சிக ஸங்க்ரமணம்: வ்ருஸ்சிக ரவி 26—27 வ்ருஸ்சிக க்ருஷ்ண பஞ்சமி திதி.
4௳ வெள்ளிக்கிழமை	—	அதிதி
5௳ சனிக்கிழமை	—	அஷ்டமி திதி
8௳ செவ்வாய்க்கிழமை	—	ஸர்வ ஏகாதசி.
12௳ சனிக்கிழமை	—	அமாவாஸ்யை.
16௳ புதன்கிழமை	—	சதுர்த்தி பஞ்சமி திதித்வயம்.
17௳ வியாழக்கிழமை	—	ஷஷ்டி திதி.
22௳ செவ்வாய்க்கிழமை	—	ஸர்வ ஏகாதசி (கைசிக ஏகாதசி.)
25௳ வெள்ளிக்கிழமை	—	திருமங்கையாழ்வார் திருநக்ஷத்ரம்.
26௳ சனிக்கிழமை	—	விஷ்ண்வாலய தீபம்-திருப்பாணாழ்வார் திருநக்ஷத்ரம்
30௳ புதன்கிழமை	—	சாப ஸங்க்ரமணம்: சாபரவி 56—51 வ்ருஸ்சிக க்ருஷ்ண சதுர்த்தி திதி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் விஷயமான

அடைக்கலப்பத்து

[வேதாந்த சிரோமணி நெடுந்தெரு. ஸ்ரீ. உப. ரா. பத்மநாபாசார்யர் இயற்றிய பதவுரை விசேஷ உரைகளுடன்]

[ஸம்புடம் 2 : ஸஞ்சிகை 10 : பக்கம் 350-ன் தொடர்ச்சி]

5-ம் பாசுரத்தின் அவதாரிகை :—ஸ்ரீ தேசிகனால், "சரண்ய சரணாகதி தத்பல விசேஷங்களை ப்ரகாசிப்பிக்கிற மந்த்ர விசேஷம்" என்று கொண்டாடப்பட்டதான த்வயம் என்னும் மந்த்ர ரத்நமானது, ஸ்ரீமானான நாராயணனை ஶரண்யனாகச் சொல்லுகிறது. அப்படிக்கிருக்க, 'ஸ்ரீந்ருஸிம்ஹனை ஶரணமாகப் பற்றுவது எப்படி ஸங்கதமாகும்!' என்று சில ஸ்தூல த்ருஷ்டிகளுக்கு ஏற்படும் சங்கையைப் பரிஹரிப்பதற்காக, ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் தன் மடியைவிட்டு ஒரு க்ஷணமும் பிரித்தெடுக்க முடியாதபடி நித்யயுக்தையான பிராட்டியுடன் ஸ்ரீமானாக யாவரும் கண்ணால் பார்த்து ஸேவிக்கும்படியாக எழுந்தருளியிருக்கிற இருப்பை முன் பாசுரங்களில், "மாமலராள் மன்னியுறை மடியுடையான்" என்றும், "சார்வளேசே ரிந்திரையும் தானுமுறை நரசிங்கன்" என்றும், "நறைமலரா ளுடனுறையும்" என்றும் பல விடங்களில் ஸாதித்துவிட்டு, இப்பாசுரத்தில் ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய நாராயணத்வமானது (எல்லா வஸ்துக்களிலும் உள்ளும் புறமும் வ்யாபித்துக்கொண்டும் அவைகளைத் தரித்துக் கொண்டும் இருத்தலானது) மற்ற ராம க்ருஷ்ணாத்யவதாரங்களில் நாராயணத்வமானது ஆஸ்திகர்களுக்கு மட்டும் சாஸ்த்ரைகவேத்யமாய் இருந்ததுபோல் இல்லாமல் பரமநாஸ்திகனான ஹிரண்யாஸுரனுக்கும் உட்பட ப்ரத்யக்ஷமாய்க் காட்டப்பட்ட விஷயம் என்றும், ஆகையால் த்வயத்தில் ஶரண்யனை ப்ரகாசப்படுத்துகிற ஸ்ரீமந் நாராயண சப்தத்தின் முக்யப்பொருள் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் என்பதில் நாஸ்திகனுக்கும் ஸம்ஶயிக்க வழியில்லை யாதலால், அவன் திருவடிகளை ஶரணமாகப் பற்றுவதே மிகவும் ஸங்கதம் என்றும் அருளிச்செய்கிறார்.

5. காரணமாய்க் காரியமாய்க் கண்டிடுமிவ் வுலகத்தில்
பூரணமா யுறைகின்ற புண்ணியனா மிவனென்று
நாரணன்தன் மெய்யுருவ மிதுவேயென் றனைவர்க்கும்
சீரணிந்து வெளிநின்ற சிங்ககுரு வடைந்தேனே.

பதவுரை :—காரணமாய் காரியமாய் கண்டிடும் இவ்வுலகத்தில் - ப்ரளய காலத்தில் நாமரூபங்க ளில்லாமல் ஸூக்ஷ்மாவஸ்தையோடும் ஸ்ருஷ்டி காலத்தில் நாம ரூபங்களுடன் ஸ்தூலாவஸ்தையோடும் அறியப்படுகிற இந்த உலகத்தில் உள்ள ஒவ்வொரு வஸ்துவிலும், பூரணமாய் உறைகின்ற - உள்ளிலும் வெளியிலும் வ்யாபித்து அவைகளில் வஸிப்பதுடன், புண்ணியனாம் இவன் என்று - அவைகளில் உள்ள தோஷங்களுடைய ஸம்பந்தம் அற்றவனாய் விளங்குபவன் இந்த பரமாத்மா என்கிற, இதுவே - [ஸ்வரூபத்தால் எங்கும் வ்யாபித்திருத்தல் என்னும்] இந்நிலைமையே, நாரணன்தன் மெய் உருவம் என்று - நாராயணனுடைய என்றும் அழியாத ஸ்வபாவம்

210119

என்று, அனைவர்க்கும் - [பரமநாஸ்திகனை ஹிரண்யாஸுரனுக்கும் உள்பட] யாவர்க்கும் தெரிவிப்பதற்காக, சீர்அணிந்து வெளி நின்ற - கல்யாண குணங்களுடன் ஸ்தம்பத்திலிருந்து வெளியே தோன்றிய, சிங்க குரு - ந்ருஸிம்ஹன் என்னும் பரமாசார்யனை, அடைந்தேன் - சரணமாக அடைந்தேன். [ஏ - அசை]

கருத்து.—'நாராயண:' என்கிற பதத்துக்கு, எல்லா வஸ்துக்களிலும் வ்யாபித்திருப்பவன் என்றும், எல்லா வஸ்துக்களுக்கும் ஆதாரமாயிருப்பவன் என்றும் பொருள். இவ்வர்த்தமானது "யச்ச கிஞ்சித் ஜகத்யஸ்மிந் த்ருஶ்யதே ஶ்ரூயதேऽபி வா அந்தர்பஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:" என்கிற உபநிஷத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. [இதன் பொருளாவது: இப்ப்ரக்ருதி மண்டலத்தில் உள்ள ஸமஸ்த சேதநா சேதநங்களும் ப்ரளய காலத்தில் நாமரூபங்களை இழந்திருத்தல் என்னும் ஸூக்ஷ்ம தசையை அடைந்து ஸ்ரிய:பதியினிடத்தில் லயத்தை அடைவதாக அநேக உபநிஷத்துக்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நிலைமையிலிருந்து மஹதஹங்காராதி கார்யங்கள் உண்டாவதால், இந்நிலைமையானது காரணாவஸ்தை என்று சொல்லப்படுகிறது. பிறகு ஸ்ருஷ்டி காலத்தில் மஹதஹங்காராதி ரூபமாயும் தேவ மநுஷ்யாதி ரூபமாயும் நாம ரூப பேதங்களுட னிருத்தல் என்னும் ஸ்தூல தசையானது கார்யாவஸ்தை என்று சொல்லப்படுகிறது. இதில் முதலில் சொன்ன காரணாவஸ்தையும், மஹதஹங்கார தந்மாத்ரைகளும், வேதத்தைக்கொண்டே தெரிந்துகொள்ளக்கூடியவைகளே தவிர, நம் போன்றவர்களால் கண்ணால் பார்க்கக்கூடியவைகள் அல்ல. பின் சொன்ன கார்யாவஸ்தையில் உள்ள தேவ மநுஷ்யாதி வஸ்துக்களோ அவரவர்களால் கண்ணால் பார்க்கக்கூடியவைகளா யிருக்கின்றன. ஆகவே, ஜகத்யஸ்மிந்- இந்த உலகில், யச்ச கிஞ்சித் த்ருஶ்யதே- கண்ணால் பார்க்கக் கூடியவைகளான யாதொரு தேவ மநுஷ்யாதி கார்ய வஸ்துக்களுண்டோ, யச்ச கிஞ்சித் ஶ்ரூயதேऽபி வா-வேதத்தால் மட்டும் அறியக்கூடியவைகளான யாதொரு மஹதஹங்காராதி கார்ய வஸ்துக்களுண்டோ ; ப்ரகிருதி என்கிற யாதொரு காரண வஸ்துவுண்டோ, தத்ஸர்வம்-இந்தக் கார்யகாரண வஸ்துக்கள் எல்லாவற்றையும், அந்தர்பஹிஶ்ச- உள்ளும் புறமும், வ்யாப்ய- வ்யாபித்துக்கொண்டும் தரித்துக்கொண்டும், ஸ்தித:- இருப்பவன், நாராயண:- நாராயணன் என்னும் பெயருடையவன் என்று, 'யச்ச கிஞ்சித்........ஸ்தித:' என்கிற உபநிஷத்தின் பொருள்.] இவ்வர்த்தத்தையே ப்ரஹ்லாதாழ்வான் ஸ ஸர்வத்ர [அவன் எங்கும் இருக்கிறான்] என்று சொல்ல, அதை ஆக்ஷேபித்து ஹிரண்யாஸுரன் தான் நாட்டிய கம்பத்தைக் காட்டி 'இதில் காணவில்லையே' என்று சொன்னதும், அதே ஸ்தம்பத்திலிருந்து வெளியே வந்து அந்த அஸுரனுட்பட யாவர்க்கும் தன்னுடைய நாராயணத்வத்தை (எங்கும் நிறைந்திருத்தல் என்னும் அர்த்தத்தை) ப்ரத்யக்ஷமாகக் காட்டிக்கொண்டு ஸ்ரீ ந்ருஸிம்ஹன் அவதரித்தவனானபடியால், சரணாகதி மந்த்ரமான த்வயத்துக்கு ப்ரதாந ப்ரதிபாத்யனான அந்த ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய திருவடிகளை ஶரணமாக அடைந்து அபயம் பெற்றால் 'நிர்பயோ நிர்பயோऽஸ்மி' என்கிற நிலை பெறலாம் என்பது கருத்து. [தொடரும்]

பிழை திருத்தம்

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஸம்புடம் 2, ஸஞ்சிகை 9, பக்கம் 334 ல் உள்ள தனியனிலும் அதன் பதவுரையிலும் "ஶ்ரீக்ஷ்மீ வகார" என்பது அச்சுப் பிழை என்றும், "ஶ்ருக்ஷ்மீ வகார" என்பது சுத்த பாடம் என்றும் கொள்க. [ரா - ப]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

செய்திகள்

ஸ்ரீ அழகிய சிங்கரின் சென்னை விஜயம்

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் க்ருபை.

ஸ்ரிய: பதியான பகவான்—ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன்—ப்ரக்ருதியாகிற பெரும் பாழிலே அகில ஸுகங்களையும் இழந்து மெழுகில் ஒட்டி ஒளி யிழந்திருக்கும் தங்கத் தூசுபோல் கிடக்கும் எல்லா ஜீவர்களையும் க்ருபை செய்யத் திருவுள்ளங்கொண்டு கரண களேபரங்களையும் வேதங்களையும் ஆசார்யர்களையும் மற்றும் வேண்டிய ஸாமக்ரீகளையும் அநுக்ரஹித்தும், ஜீவர்களின் க்ஷேமகாரணமான விவேகம் விருத்தியாகாமையைக் கண்டருளி, இனிமேல் தானே நேராக எழுந்தருளித் தமது சுபாஶ்ரயமான திருமேனியை நம் கண்ணுக்கு இலக்காம்படி செய்து விவேகத்தை அழிக்கும் விரோதிகளை விலக்கி நம்மை உஜ்ஜீவிக்கத் திருவுள்ளங்கொண்டு ப்ரதி க்ராம நகரங்கள் தோறும் கோயில் கொண்டெழுந்தருளியும், அதுவும் போதாமல் பாதுகை சாத்திக்கொண்டு ப்ரதி க்ருஹங்கள் தோறும் தனது அபார காருண்யம் தோன்றுமாறு எழுந்தருளியும் அநுக்ரஹித்து வருகிறான் என்பது ஸர்வ ஸம்ப்ரதிபந்நமான விஷயம்.

---

(1)

ஸ்ரீ அழகிய சிங்கரின் சேத்துப்பட்டு விஜயம்

கருவிலே திருவுடையவராய், காணுந்தோறும் இனியராய், கண்டோர் யார்க்கும் எளியராய், 'பீதகவாடைப் பிரானார் பிரமகுரு வாகிவந்து' என்றபடி பகவத் துல்யராய், எண்ணில் பல் குணங்களும் மலியப் பெற்றவராய், செங்கமலம் அந்தரம் சேர் வெங்கதிரோற்கு அலருமாப்போல் தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கு முணர்வு பெற்றவராய் எழுந்தருளியுள்ள ஸ்ரீ அழகிய சிங்கர், சென்னை நகரவாஸிகளை அநுக்ரஹிக்கத் திருவுள்ளம் பற்றி ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடன் எழுந்தருளும் ப்ரமேயத்தில் முதலில் சென்னையைச் சார்ந்த சேத்துப்பட்டு என்னும் நகரத்தில் ஸ்ரீமான் புருஷோத்தமதாஸ் கோகுல்தாஸ் பங்களாவுக்குத் தமது பரிஜந பரிச்சதங்களோடு 9உ (25—9—'43) எழுந்தருளினர். அப்போது ஸ்ரீமான் கோகுல்தாஸ் ஸ்ரீ அழகியசிங்கரை அன்புடன் வரவேற்றுப் பெருமாளைத் தமது பங்களாவில் ஒரு திவ்ய ஸ்தலத்தில் எழுந்தருளப் பண்ணி அபிகமநாராதநம் முதல் ராத்ரி டோலோத்ஸவம் வரை எல்லாக் கைங்கர்யங்களையும் தாமே உடனிருந்து ஸம்ப்ரமமாக நடத்திவைத்தது மன்றி, ஸ்ரீ மதுராந்தகம் பாடசாலைக்கு 1000 ரூபாய் நன்கொடையும் அளித்தா ரென்பதும் நமது அன்பர்கள் யாவரும் அறிந்த விஷயம்.

---

(2)

திருவல்லிக்கேணி விஜயம்.

மறுநாள் 10உ (26—9—'43) ஞாயிற்றுக்கிழமை த்வாதசியாதலால் ஸ்ரீ அழகிய சிங்கர் ஸ்ரீமான் கோகுல்தாஸ் பங்களாவிலேயே பகவதாராதநத்தைச் செய்தருளி, நுங்கம்பாக்கம் மார்க்கமாகத் திருவல்லிக்கேணிக்கு எழுந்தருளினர். ஸ்ரீ ஸ்வாமி ஸேவார்த்தம் காலை 8 மணி முதற்கொண்டே திருவல்லிக்கேணி வாஸிகளும் பிறரும் சுமார் 1000 பேர் கடற்கரைக்கு ஸமீபத்தில் சாதக வ்ருத்தியை அநுஸரித்து ஸ்ரீ ஸ்வாமியின் ஆகமநத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். ஸ்ரீ அஹோபில மடத்திலிருந்து ஆராதகர் முதலியோர் பூர்ண கும்ப ஸஹிதம் வாத்ய கோஷங்களுடனும் வேத பாராயணத்துடனும் அவ்விடம் எழுந்தருளியிருந்தனர். பகல் $1\frac{1}{2}$ மணி சுமாருக்குக் கடற்கரை மார்க்கமாக ஸ்ரீ அழகிய சிங்கர் எழுந்தருளவே, ஸ்ரீ வைஷ்ணவர் யாவரும் களிப்புக் கடலுள் மூழ்கிப் பூர்ண கும்பத்துடன் ஸ்ரீ ஸ்வாமியை வரவேற்க, ஸ்ரீ ஸ்வாமி தமது விபூதிக

ளுடன் கங்கைகொண்டான் மண்டபத்துக்கு எழுந்தருளினர். அப்பொழுது ஸ்ரீ பார்த்தஸாரதி தமது ஸ்ரீ சடகோபனை நியமிக்க, சடாரியும் சத்ர சாமராதி அநந்த கொத்து பரிஜநங்களுடனும் ஸ்ரீ அழகிய சிங்கரை வெகு குதூஹலத்துடன் அநுக்ரஹித்து, திருமாலை திருப்பரியட்டம் சாதரா முதலானவைகளைத் தந்தருளி வரவேற்றார். இவ்வாறு க்ரமமாக அம்மண்டப வாயிலில் மர்யாதை நடந்த பிறகு, ஸ்ரீ அழகிய சிங்கர் நான்கு பெரிய மாட வீதிகளிலும் ஊர்வலமாக எழுந்தருளிப் பிறகு ஸ்ரீ பார்த்தஸாரதியை மங்களாஶாஸநம் செய்ய எழுந்தருளினர். ஸந்நிதியில் ஸ்ரீ பார்த்தஸாரதியையும் ஸ்ரீ வேதவல்லித் தாயாரையும் ஹ்ருதயங்கமமாக மங்களாஶாஸநம் பண்ணிக்கொண்டு, அந்தந்த ஸந்நிதிகளுக்கு 100 ரூபாய் பொறுமான துப்பட்டாவை ஸமர்ப்பித்து, தமக்குரிய ஸந்நிதி மர்யாதைகளையும் பெற்றுக்கொண்டு ஸுமார் 4-மணிக்கு ஸ்ரீ அஹோபில மடத்துக்கு எழுந்தருளினர். இக்காட்சியைத் திரளான ஜனங்கள் வந்து கண்ணுற்றுத் தந்யரானர்கள். அதுமுதல் பத்துத் தினங்கள் ஸ்ரீ அழகிய சிங்கர் திருவல்லிக்கேணியிலேயே எழுந்தருளியிருந்து, ஸ்ரீ ஆதிவண் சடகோப மஹாதேசிகன் உத்ஸவத்தைச் சாற்றுமறை பர்யந்தம் உடனிருந்து நடத்திவைத்தார்.

---

(3)

மாம்பலம் விஜயம்

ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்ய ஸ்வாமியை முன்னிட்டுக்கொண்டு பல ப்ரமுகர்கள் திருவல்லிக்கேணிக்கு வந்து, மாம்பலம் எழுந்தருளவேண்டுமென்று ஸ்ரீ அழகிய சிங்கரை ப்ரார்த்திக்க, ஸ்ரீ அழகிய சிங்கரும் அவ்வாறே திருவுள்ள மிசைந்து புரட்டாசி 20உ (6—10—43) புதன்கிழமை மாம்பலம் எழுந்தருளலானர். காலை முதல் ஸ்ரீ அழகிய சிங்கர் ஆகமநத்தை எதிர்பார்த்துக்கொண்டு நித்யஸூரி துல்யரான பல ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஸ்ரீ ராமக்ருஷ்ண (ஆண் மக்கள்) கலாசாலையில் பூர்ண கும்ப புரஸ்ஸரம் ஸ்ரீ அழகிய சிங்கரை வரவேற்று, (இராமநாதன் வீதியிலுள்ள பெண்கள்) கலாசாலைக்கு எழுந்தருளப் பண்ணிக்கொண்டு சென்றனர். அப்போது ப்ரஹ்மஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரிகள் ஸம்ஸ்க்ருதத்தில் ஒரு ஸ்வாகத நிவேதந பத்ரிகை படித்து ஸ்ரீ அழகிய சிங்கர் ஸந்நிதியில் ஸமர்ப்பித்தார். அங்கு ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் 3 திநங்கள் [20 முதல் 22உ வரை] விஶேஷ வைபவத்துடன் திருவாராதநம் கண்டருளி, ஸேவார்த்திகள் அனைவர்க்கும் விசேஷமாக ஸேவை ஸாதித்தார். அம்மூன்று நாட்களும் ததியாராதநம் வெகு சிறப்பாக நடந்தேறியது. பல்லிடங்களில் கண்ணன் டோலோஸவம் கண்டருளினர். ஸ்ரீ அழகிய சிங்கர், தாம், அக்கலாசாலையில் எழுந்தருளியிருப்பதினும் ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்ய ஸ்வாமி திருமாளிகையில் எழுந்தருளியிருப்பதே மிகவும் பாங்காகுமெனத் திருவுள்ளம்பற்றி, பரம பாகவதரான விதுரருடைய திருமாளிகைக்குக் கண்ணன் எழுந்தருளினதுபோல் எழுந்தருளியிருந்தார். "......... காளமுகில் வந்ததன், இல்லி ரண்டுதினம் வைகு தற்குலகி லெண்ணி லாததவ மெய்தினன்" என்று விதுர ஸ்வாமிகளைப்பற்றி வில்லியார் வியந்து கூறினதுபோல், பல ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஸ்வாமியின் தந்யதையை ஶ்லாகித்துப் பேசினர். ஸ்வாமியும் தமது ஸுக்ருத பரிபாகத்தையும் பாக்யத்தையும் நினைந்து, ஸ்ரீ அழகிய சிங்கர்க்குத் தம்மாலான தொண்டுகள் புரிந்துவந்தார். இவ்வாறு ஸம்ப்ரமமாக 3 நாட்கள் எழுந்தருளியிருந்த பிறகு, 23உ முதல் 25உ வரை ஸ்ரீ அழகியசிங்கர் மயிலாப்பூர் எழுந்தருளும்படி யிருந்தது. —ஒரகடம் கோ. ஸுதர்ஶந தாஸஃ

---

(4)

ஸ்ரீ அழகியசிங்கர் 9-10.43 காலையில் மாம்பலமிருந்து மயிலாப்பூர் பலாத் தோப்புக்கு எழுந்தருளி, ஸ்ரீ தேசிக மண்டபத்தில் அபிகமந ஆராதனம் நடந்தது.

திருமயிலை விஜயம்.

ஸ்ரீ. ஸர். S. வரதாசாரியர், ஸ்ரீ. P. N. ஸ்ரீநிவாஸாசாரியர், ஸ்ரீ. M. ஸ்ரீநிவாஸாசாரியர், ஸ்ரீ. T. வேதாந்தாசாரியர், ஸ்ரீ. M. R. ராஜகோபாலய்யங்கார், ஸ்ரீ. கமலாபுரம் ராமஸ்வாமி அய்யங்கார் முதலானவர்களும் இன்னம் அநேக ப்ரமுகர்களும் பூர்ணகும்ப ஸமர்ப்பண பூர்வமாக ஸ்ரீ அழகியசிங்கரைத் தண்டன் ஸமர்ப்பித்து, வேதபாராயண கோஷ்டியுடனும்

வாத்ய கோஷங்களுடனும் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்தார்கள். ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாள் ஸந்நிதியிலிருந்து ஸகல மரியாதைகளுடன் ஸ்ரீ சடாரியை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு எதிர்கொண்டு வரவே, ஸ்ரீ அழகியசிங்கர் ஷை மரியாதைகளை ஸ்வீகரித்துக்கொண்டு ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் ஸந்நிதிக்கு எழுந்தருளி மங்களாஸாஸநம் செய்து, பிறகு ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்பெருமாள் ஸந்நிதியினுடைய மரியாதைகளையும் ஸ்வீகரித்துக்கொண்டு, ஷை ஸந்நிதிக்கும் ஸ்ரீ தேசிகன் ஸந்நிதி முதலான எல்லா ஸந்நிதிகளிலும் மங்களாஶாஸநம் செய்துகொண்டு ஸ்ரீ அழகிய சிங்கருக்கு ப்ரத்யேகமாக ஏற்படுத்தியிருந்த மாமண்டூர் ஸ்ரீநிவாஸாசாரியருடைய 'ஸ்ரீ ந்ருஸிம்மகுடி' என்னும் க்ரஹத்துக்கு எழுந்தருளினர்.

ஸ்ரீ. S. வரதாசாரியரால் அன்று ததீயாராதநமும் டோலோத்ஸவமும் சிறப்பாக நடத்தப்பட்டன. 10-10-43ல் மயிலாப்பூர் ப்ரமுகர்களால் கொடுக்கப்பட்ட நன்கொடையிலிருந்து ததீயாராதநாதிகள் விமரிசையாக நடந்தேறின. ஸாயங்காலம் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ மாதவப்பெருமாள் ஸந்நிதிக்கு மங்களாஶாஸநம் செய்ய எழுந்தருளும்போது, யானை குதிரை முதலிய பிருதுகளுடனும் மேள வாத்யங்களுடனும் தங்கமயமான திருப்பல்லக்கில் எழுந்தருளி, வேதபாராயண கோஷ்டிகளுடனும் நூற்றுக்கணக்கான ஆஸ்திகர்கள் பின்செல்ல வீதிவலமாகப் பவனி வந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. 11-10-43 ல் ஸ்ரீ S. வேங்கடேசய்யங்காரால் ததீயாராதநமும் டோலோத்ஸவமும் நடத்திவைக்கப்பட்டதோடு, இன்னம் சில டோலோத்ஸவங்களும் நடந்தன. அன்று இரவு மயிலாப்பூர் ஸ்திரீகளின் நன்கொடையில் ஸ்ரீ தேசிகன் மண்டபத்தில் நடந்த ஸ்ரீ கண்ணன் டோலோத்ஸவத்துக்கு ஸ்திரீ புருஷர்களுள்பட சுமார் 2000க்கு மேற்பட்டவர்கள விஜயம்செய்து, ஷை டோலோத்ஸவத்தைக் கடைசிவரையில் இருந்து ஸேவித்தது ரொம்ப அழகாகவும் ஸந்தோஷமாகவும் இருந்தது. ஷை கைங்கர்யம் ஸ்ரீ மாமண்டூர் ஸ்ரீநிவாஸாசாரியர் பார்யை ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாளின் பெருமுயற்சியின்பேரில் முன்னின்று ஷை டோலோத்ஸவத்தை ரொம்ப விமரிசையாகவும் எல்லோருக்கும் ஸந்தோஷமுண்டாகும்படி நடத்தியது மெச்சத்தகுந்தது. ஸ்ரீ அழகியசிங்கர் அம் மூன்று தினங்களிலும் ரொம்ப குதூகலமாகவே எழுந்தருளியிருந்து, 12-10-43 அதிகாலையில் தமது பரிவாரங்களுடன் திருவல்லிக்கேணிக்கு எழுந்தருளினர்.

புத்தங்கோட்டகம் ரா. வாஸுதேவ ஐயங்கார்.

---

(5)

மீண்டும் திருவல்லிக் கேணி விஜயம்.

திருமயிலையில், ஸ்ரீ அழகிய சிங்கர் ஸ்ரீநிவாஸனையும் ஸ்ரீ தேசிகனையும் மங்களாஶாஸநம் செய்தருளி, 26ஆ யன்று மீண்டும் திருவல்லிக்கேணிக்கு எழுந்தருளினர். அப்பொழுது ஸ்ரீ மடத்தில் ஸ்ரீ தேசிகன் உத்ஸவமாதலால், அதனையும் சாத்துமறை பர்யந்தம் உடனிருந்து நடத்திவைத்தார். 31ஆ சாத்துமறை யன்று, பல்லோருடைய ப்ரார்த்தனைக்கு இணங்கி மாலை 7-மணிக்கு "ஸநாதந தர்மம்" எனும் விஷயத்தைப்பற்றி, கனியும் தேனும் கரும்பும் கசக்கப் பனிமொழி பயிலும் பண்புடை யண்ணலான ஸ்ரீ அழகியசிங்கர் செவிக்கினிய செஞ்சொல்லால் ஓர் உபந்யாஸம் செய்தார். கடிந ஸ்தலத்திலே ஒரு பாட்டம் வர்ஷித்தால் அது நெகிழ்ச்சிக்கு உறுப்பாமாப்போல், அதைக் கேட்டுக் கொண்டிருந்த ஶ்ரோதாக்கள் யாவருடைய நெஞ்சமும் நெகிழ்ச்சி யடைந்தது. "மாசில் மனந்தெளி முனிவர் வகுத்தவெல்லாம் மாலுகந்த வாசிரியர் வார்த்தைக் கொவ்வா" எனும் ஸ்ரீ தேசிகன் பாசுரம் நமது ஸ்ரீ அழகியசிங்கர் விஷயத்தில் அந்வர்த்தமானமை கண்டு யாவரும் வியந்தனர்.

---

(6)

தண்டையார்ப்பேட்டை விஜயம்.

திருவொற்றியூர் ஹைரோட்டில் ரைஸ்மில் ஸ்ரீ. உப. ஆ. ரங்கஸாமி ஐயங்கார் ஸ்வாமியும் அவரது மாதுலரான நெம்மிலி ஸ்ரீ. உப. கோவிந்தாசார்ய ஸ்வாமியும், 31ஆ திருவல்லிக்கேணிக்கு வந்து, தண்டையார்ப்பேட்டைக்கு எழுந்தருளவேண்டுமென்று ஸ்ரீ அழகியசிங்கரை ப்ரார்த்திக்க, அவ்வாறே ஐப்பசிமீ 1ஆ ஸ்ரீ அழகியசிங்கர் அப்பிரார்த்தனைக்கு இணங்கித்

தண்டையார்ப்பேட்டைக்கு எழுந்தருளினர். அங்கு அவரது பங்களா வெகு விஸ்தாரமாயும் ஸந்நிவேசம் அழகாயும் இருந்தமையால், ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனும் அவனுடைய விபூதிகளும் அதிமாத்ரம் பாங்காகவே அங்கு எழுந்தருளியிருந்தனர். ஸ்ரீ. உப. ரங்கஸாமி ஐயங்கார் ஸ்வாமி மிகுந்த தனிகர்; ஆஸ்திகர்; மநஸ்வீ; ஸ்ரீ அழகியசிங்கர் எவ்வளவு நாள் தமது பங்களாவில் எழுந்தருளியிருந்தாலும், சளைக்காமல் ஆராதிக்கும் இயல்பு வாய்ந்தவர். சென்னையில் நம் அழகிய சிங்கர் 24 தினங்கள் எழுந்தருளியிருக்கும்படி யிருந்தது. அவற்றுள் தண்டையார்ப் பேட்டையே பல விதத்திலும் ஸௌகர்யமாயிருந்த தென்னலாம். மறுநாள் கண்ணன் அங்கு டோலோத்ஸவம் கண்டருளினர். ஐப்பசி 1வ, 2வ ஆகிய இரண்டு நாட்கள் ஸ்ரீ அழகியசிங்கர் அவ்விடம் எழுந்தருளியிருந்து, மறுநாள் (3வ) சைதாப் பேட்டைக்கு எழுந்தருளினர்.

---

(7)

சைதாப்பேட்டை விஜயம்.

ஸ்ரீ அழகியசிங்கர் சென்னையைச் சார்ந்த தண்டையார்ப்பேட்டையினின்றும் (20-10-43) புதன்கிழமை ப்ராதஃ காலம் 7-மணிக்குச் சைதாப்பேட்டை எழுந்தருளும்படி யிருந்தது. பூர்ணகும்ப புரஸ்ஸரம் ஸ்ரீ அழகிய சிங்கரை வரவேற்றுப் பெருமாள் ஸந்நிதியில் எழுந்தருளச்செய்ததும், அநுஷ்டாநாநந்தரம் திருவடி கோவிலிலிருந்து பெருமாள் மர்யாதையோடு ஸ்ரீ அழகியசிங்கர் தமது பிருதாவளிகளுடன் பெருமாள் ஸந்நிதிக்கு எழுந்தருளிப் பெருமாளையும் தாயாரையும் மங்களாஸாஸநம் செய்தருளினர். அபிகமநாராதநத்தின் பிறகு, ஸ்ரீ உப. ஒரகடம் ஸுதர்ஸநாசார்யரும் சைதை ஸ்ரீ. உப. க்ருஷ்ணமாசார்யரும் தாம் தனித் தனி முறையே இயற்றின ஸ்வாகத நிவேதந பத்ரிகையை ஸ்ரீ அழகியசிங்கர் திருமுன்பு படித்து ஸமர்ப்பித்தனர். ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ள முவந்து திருச்செவி சாத்தி அவற்றை அங்கிகரிக்கும்படி யிருந்தது. 4-மணிக்குத் ததீயாராதநம் ஸம்ப்ரமமாக நடைபெற்றது.

ராத்ரி 8-மணிக்குக் கண்ணன், சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் ப்ரம்ஹஸ்ரீ C. N. குப்புஸாமி ஐயரவர்களின் பங்களாவிலும், 12-மணிக்கு ஸ்ரீ ராமாநுஜ கூடத்திலும் வெகு ஸம்ப்ரமமாக டோலோத்ஸவம் கண்டருளினர். ஷை ஸ்ரீ குப்பு ஸாமி ஐயரவர்களும், அவர்களின் தம்பியாகிய (டீச்சர்ஸ் காலெஜ் ப்ரின்ஸிபல்) ப்ரம்ஹ ஸ்ரீ C. N. கணபதி ஐயரவர்களும் டோலையில் எழுந்தருளியிருந்த கண்ணனை அத்யந்த பக்தியுடன் ஸேவித்து ஆநந்த பரிதர்களாயினர். அவ்வமயம் சைதாப் பேட்டை ஸ்ரீ ஸத் வித்யா பாடசாலை மாணவிகளின் திவ்யப்ரபந்த பண்ணிசை ஸங்கீதம் வெகு இனிமையாக நடைபெற்றது. ஸ்ரீ அழகியசிங்கர், (டீச்சர்ஸ் காலெஜ் ஹெட் க்ளார்க்) ஸ்ரீ. உப. விஜயராகவய்யங்கார் உள்ளிட்ட பல்லோருடைய ப்ரார்த்தனைக்கும் அசஞ்சலமான பக்திக்கும் இணங்கி டாட்ஹண்டர் நகர் வீதியில் ஊர்வலமாக எழுந்தருளி ஸேவை ஸாதித்தபிறகு, அங்கிருந்து ஷை ஐயரவர்களின் பங்களாவுக்கு எழுந்தருளினர். அப்போது அவ்விரு ஸோதரரும் ஸ்ரீ அழகியசிங்கரைத் தமது பரிபூர்ண பக்தி வெளிப்படுமாறு பல்கால் தண்டன் ஸமர்ப்பித்துத் தங்கள் க்ருதார்த்ததையை விண்ணப்பித்துக்கொண்டனர். ஸ்ரீ அழகியசிங்கரும் அவர்களைப் பரிபூர்ணமாய்க் குளிரக் கடாக்ஷித்து அநுக்ரஹித்து, பகவத் பாகவத ஆசார்யர்களிடம் ஆஸ்திக்யமும் அந்தரங்க பக்தியும் மேன்மேல் வ்ருத்தியாகுமாறு சில ஸதுபதேசங்களைச் செய்தருளினர். யாவரும் அந்த ஸ்ரீ ஸூக்திகளைக் கேட்டு ஆநந்த பரிதர்களாயினர்.

ஒரகடம் கோமாண்டூர் ஸுதர்ஸந தாஸன்.

1. ஸ்ரீ அழகியசிங்கரின் சைதாப்பேட்டை விஜயத்தில்
ஸ்ரீ. உப. ஸுதர்ஸநாசார்யரால் ஸமர்ப்பிக்கப்பட்ட ஸ்வாகத நிவேதந பத்ரிகா

சீரா ருந்தித் திருமலர்ப் போதாற்
பாரேழ் பூத்த பரமன் பவித்ரன்;
ஆரா வமுத னலைகடற் றுயில்வோன்;

நாரா யணனன் னறைவண் டுளவதீ
தாரார் தடந்தோட் டாமரைக் கண்ணன்;
பேரா யிரங்கொள் பெருமா னமலன்;
மாயன் முகுந்தன் மலரிந் திரையாள்
நேயன் நிமலன் நித்யா நந்தன்;
மருமலர் மாலேயும் மணிகவுத் துவமும்
திருமறு வோடு திகழும் மார்வினன்;
மீனமாய் ஆமையாய் மிடல்வெள் ளெயிற்றின்
ஏனமாய் வந்திவ் விருநில மெடுத்தோன்;
இரணிய ஞகை மிருகூ ருக
முரணிய சீயமாய் முன்னுற் பவித்தோன்
ஆகிய வம்மா னடியிணை மறவா
மாகுரு பரனே! மாசிலா மணியே!
சீர்மலி யுலகில் சிறப்பமைந் தோங்கும்
ஏர்பெறு நாடுகள் யாவற் றுள்ளும்
தொண்டைநன் ஞடு சான்ரே ருடைத்தெனப்
பண்டைப் பிராட்டி பகர்ந்ததை யறிவீர்;
அந்தநன் னுட்டிற் கணியாய் விளங்கும்
இந்திரை வதியு மிஞ்சிமே டதனில்
அருமறை பயிலு மந்தணர் குலத்தில்
ஒருசுடர் போல வுற்பவித் தும்பர்
வானவ ரடையா மாண்புறு தூய
ஞான வமுதை நன்கனம் பிலிற்றும்
ஒருதனி முதலே! ஒப்பிலா துயர்ந்த
குருபர! தத்துவ! கோதிலாக் குணத்தோய்!
நனிமகிழ் வரும்பும் நன்னகை முகத்தோய்!
முனிவிகந் துயர்ந்த மூதறி வாள!
கனியுந் தேனுங் கரும்புங் கசக்கப்
பனிமொழி பயிலும் பண்புடை யண்ணல்!
வடநூற் பௌவமும் வண்டமிழ் வாரியும்
உடனுண் டுவக்கும் ஒருபெரு முனிவ!
ஆழ்வா ருருந்தமிழ் அமுத மருந்தும்
வாழ்வே வாழ்வாய் மதிக்கு மனத்தோய்!
விசிட்டாத் துவைத மெய்ப்பொருள் விளக்கும்
சதுட்டய நூல்கள் சழக்கற வுணர்ந்தோய்!
எங்கணும் சென்றே யிறையருட் பிழம்பாம்
பொங்கொளி பரப்பிய புண்ணியப் பரிதி!
தன்னலங் கருதாத் தற்பர! உலகின்
இன்னலு மின்பமு மிகந்தவெம் பெரும!
ஏரார் காரு குரிச்சியில் வந்த
சீரா ரிலக்குமி நரசிம்ம தேசிகன்
அழகிய சிங்க னகோபிலத் தாசாற்
பழகி யடித்தொழில் பலபுரிந் துய்ந்தோய்!
சீலங் கனிந்த செவ்விய திறலோய்!
ஞாலம் புகழும் நற்சீ ரங்க
சடாரி யதீந்த்ர மாதே சிகனே!
மடாதி பதியே! மாபெரு வள்ளால்!
முக்கோற் பகவ மூதறி வாள!
தக்கோர் பரவு தனிப்பெரு மூர்த்தி!
படிமிசைப் படரும் பவவினை யொழிய
அடியோங் களைநீ அநுக்ரகித் தருள
கைதைசேர் பூம்பொழில் சைதையம் பதிக்கண்
மைதிலி மணாளன் மன்னிய வருளால்
வையம் புகழும் வைணவ மணியே!
ஐயநின் வரவு நல்வர வாகுக.

2. சைதை ஸ்ரீ. உப க்ருஷ்ணமாசார்யரால் ஸமர்ப்பிக்கப்பட்ட பாசுரங்கள்

1. அங்கித் தம்பரும் வாயுத் தம்பரும்
எங்கு முண்ணுவ ரேது மப்புவின்
துங்கத் தம்பர்கள் துதிக்கு நம்முடை
சிங்கத் தம்பர்கண் சீமைக் கும்செலும்

2. எல்லாக் கோயிலி லெல்லாத் தெய்வமும்
எல்லார்க் குந்தொழ வேற்பா டாமென
நல்லார் போற்றுநம் நரசிங் கப்பிரான்
நல்லா சார்யனை நாடிச் சென்றதாம்

---

(8)

தக்ஷிண அயோத்தி வடுவூர் ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் மஹோத்ஸவம்

நாளது ஸுபாநு வருஷம் புரட்டாசி மாதம் 10வ (26-9-43) ஸ்ரீ தக்ஷிண அயோத்தி என ப்ரஸித்தி பெற்ற வகுளாரண்ய க்ஷேத்ரமாகிற வடுவூர் ஸ்ரீ க்ராமத்தில் ஸ்ரீ அஹோபில மடத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஆதிவண சடகோப யதீந்ர மஹாதேசிகன் மஹோத்ஸவம், உபய வேத பாராயணங்களுடன் ஆரம்பிக்கப்பட்டுப் பன்னிரண்டு நாட்கள் ப்ரதிதிநமும் ஸ்ரீ ஸீதாலக்ஷ்மண ஹநுமத் ஸமேதனை ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் திவ்ய திருப்பரிபட்டம் திருமாலை முதலிய ப்ரஸாதங்கள் சத்ர சாமராதிகளுடன் ஸமர்ப்பிக்கப்பட்டு, திவ்யப் பிரபந்த வேத பாராயண கோஷ்டிகளுடன் திருவீதிப் புறப்பாடு ஸ்ரீ ஸந்நிதி சிஷ்யர்களாலும் மற்றும் ஸ்ரீ ஸந்நிதி அபிமாநிகளாலும் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டு 19வ புரட்டாசிமீ (5-10-43) திருக்கேட்டையில் சாத்துமுறையும் நடைபெற்றது. இந்த சுப தினத்தில், ஸ்ரீ மஹாதேசிகன் ஸரயூ புஷ்கரிணியில் தீர்த்தவாரிக்கு எழுந்தருளித் திருமஞ்சனம் கண்டருளிய ஸமயத்தில், ஸ்ரீ அழகியசிங்கரின் நியமனத்தின் பேரில் திருவல்லிக்கேணியிலிருந்து அனுப்பப்பட்ட வெள்ளி கிரீடம் வந்து சேர்ந்தது. தீர்த்தவாரி ஆனவுடன் ஸ்ரீ மஹாதேசிகனுக்கு கிரீடம் ஸமர்ப்பிக்கப்பட்டுத் திருவிதி வலம் வந்து ஸ்ரீ அஹோபிலமடம் எழுந்தருளியபின் அதிரம்யமாக சாத்துமறை வைபவங்களைக் கண்டருளினர்.

இதே தினத்தில் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் ஸந்நிதியில் ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனுடைய ஏழாவது உத்ஸவமான சூர்ணோத்ஸவமும், ஸாயங்காலம் புஷ்ப விமானத்தில் திருவீதி ப்ரமணமும் ஒன்று சேர்ந்தது அற்புதமாக இருந்தது. வடுவூர் ஸ்ரீ அஹோபிலமட ஆராதகர் ஸ்ரீ உப மாடபூசி புராணம் ரா. நரஸிம்மா சாரியாருடைய முயற்சியாலும், இதர ஸ்ரீ ஸந்நிதி சிஷ்யர்களுடைய உதவியாலும், 6-10-43 புதன்கிழமை புஷ்ப விமானத்தில் ஸ்ரீ ஆதிவண் சடகோபனுக்கு விடாயாற்றி உத்ஸவம் சிறப்பாக நடந்தது. மறுநாள் இரண்டாவது விடாயாற்றியும் கொண்டாடப்பட்டது. புராணம் மாடபூசி ஸ்ரீ. உப. வீ. கோபாலாசாரிய ஸ்வாமியால் திவ்யப் ப்ரபந்தம், வேதபாராயணம் செய்த அயலூர் ஸ்வாமிகளுக்கும், உள்ளூர் ஸ்ரீ ஸந்நிதி அபிமான ஸ்வாமிகளுக்கும் ஸம்பாவனை ஸமர்ப்பிக்கப்பட்டது. இந்த ஸ்ரீ கிராமவாஸிகளான தேசிகபக்தர்களின் ஆசாரிய பக்தியே இந்த மஹோத்ஸவத்தைச் சிறப்பிக்கச் செய்தது. —வடுவூர் மாடபூசி புவனம் A. சேஷாசாரியன்.

---

(9)

நெடுந்தெருவில் உத்ஸவம்

திருக்குடந்தைக்கு 12 மைல் மேற்கே உள்ளதும், ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய திவ்ய கடாக்ஷத்துக்கு முக்ய பாத்ரமானதுமான நெடுந்தெரு என்கிற ஸ்ரீ வைஷ்ண வாக்ரஹாரத்தில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ. ராஜகோபால மூர்த்திக்கு நாளது புரட்டாசிமீ 13வ (29-9-43) முதல் 8-10-43 உவரையில் நவராத்திரி டோலோத்ஸவமும், விஜயதசமியில் அம்பு போடுத லுத்ஸவமும், அந்த ஸந்நிதியில் அர்ச்சா மூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனுக்கும் ஸ்ரீ மதாதிவண் சடகோப யதீந்ர மஹாதேசிகனுக்கும் வேதபாராயண அத்யாபக

கோஷ்டிகளுடன் தினம்தோறும் வீதிப் புறப்பாடும், புரட்டாசித் திருக்கேட்டையில் ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுக்கு அவப்ருதஸ்நாந மஹோத்ஸவமும் சாத்துமுறையும், புரட்டாசித் திருவோணத்தில் ஸ்ரீ தேசிகனுக்கு அவப்ருதஸ்நாந மஹோத்ஸவமும் சாத்துமுறையும் அங்குள்ள ஆஸ்திகர்களால் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. இவ்விதமே 25 வருஷகாலமாக இவ்வுத்ஸவங்கள் நடந்து வருகின்றனவென்பது குறிப்பிடத்தக்கது.—ரா. பத்மநாபசாரியர், நெடுந்தெரு

---

(10)

ஸ்ரீ அழகியசிங்கரின் மாம்பலம் விஜயத்தில் கடலங்குடி வித்வாந் ப்ரஹ்மஸ்ரீ நடேஶ ஶாஸ்த்ரிகளால் ஸமர்ப்பிக்கப்பட்ட ஸ்வாகதப் பத்ரிகை

𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑌮𑌠𑌾𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌪𑌦𑌵𑍀𑌂 𑌸𑌂𑌪𑍍𑌰𑌜𑌗𑍍𑌮𑍁𑌷𑌾𑌮𑍍 ।
𑌕𑌾𑌨𑍍𑌤𑌸𑌿𑌂𑌹𑌾𑌭𑌿𑌧𑌾𑌨𑌾𑌨𑌾𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌦𑌾𑌨𑍍𑌤𑌿𑌵𑌰𑍇𑌣𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑍍 ॥ 1

𑌇𑌯𑌂 𑌸𑍍𑌵𑌾𑌗𑌤𑌪𑌤𑍍𑌰𑍀 𑌚 𑌨𑌟𑍇𑌶𑍇𑌨 𑌸𑌮𑌰𑍍𑌪𑍍𑌯𑌤𑍇 ।
𑌦𑌮𑍍𑌭𑌾𑌬𑍍𑌧𑌿𑌨𑌲𑌕𑌾𑌯𑌿𑌤𑌶𑍇𑌷𑌹𑍋𑌮𑍇
𑌸𑌰𑍍𑌵𑍇𑌨 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌪𑌿 𑌯𑍋𑌗𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌮𑍍 ।
𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌵𑌹𑍇 𑌨𑌕𑌵𑌪𑍍𑌰𑌤𑌪𑌸𑍀𑌕𑍍𑌷𑌾
𑌦𑌶𑌾𑌬𑍍𑌦 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌿 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨𑍋 𑌨𑌃 ॥ 2

𑌸𑌾𑌰𑌸𑍍𑌵𑌤𑌾𑌂𑌹𑍋𑌨𑌿𑌯𑌤𑌾𑌬𑍍𑌦𑌵𑌰𑍍𑌷𑍍𑌯𑌾
𑌪𑍍𑌰𑌶𑍍𑌰𑌯 𑌬𑍋𑌧𑌯𑌾𑌶𑍍𑌰𑍁𑌤𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌨𑍀𑌤𑌮𑍍 ।
𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌾𑌯𑌤𑌂 𑌦𑌦𑌤𑍇 𑌜𑌨𑌾𑌨𑌾𑌂
𑌯𑍇 𑌕𑌾𑌨𑍍𑌤𑌸𑌿𑌂𑌹𑌾𑌃 𑌪𑍍𑌰𑌣𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑍍𑌯𑌹𑌂 𑌤𑌾𑌨𑍍 ॥ 3

𑌸𑍍𑌵𑌾𑌗𑌤𑌂 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌸𑌾𑌦𑌰𑌂 𑌶𑌮𑍍𑌭𑌵𑍇
𑌕𑌾𑌨𑍍𑌤𑌸𑌿𑌂𑌹𑌾𑌭𑌿𑌧𑌶𑍍𑌰𑍀𑌮𑌹𑌾𑌯𑍋𑌗𑌿𑌨𑌾𑌮𑍍 ।
𑌯𑍇𑌽𑌵𑌦𑌦𑍍𑌭𑍍𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌹𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌦𑍃𑌷𑍍𑌟𑍇𑌨 𑌸𑌂-
𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌨𑌾 𑌭𑌾𑌵𑌵𑌚𑍍𑌛𑍍𑌰𑍀𑌵𑌦𑌾𑌜𑍍𑌞𑌯𑌮𑍍 ॥ 4

𑌨𑍍𑌯𑌾𑌯𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌯𑍋𑌗𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑍋𑌰𑍍𑌵𑍍𑌯𑌾𑌕𑍃𑌤
𑌕𑌰𑍍𑌤𑍃𑌕𑌾𑌂 𑌯𑍇𑌽𑌦𑌿𑌤𑍇𑌨𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑌾𑌹𑌜𑍋 𑌹𑌿 𑌯𑍇 ।
𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌦𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌸𑌦𑍍𑌗𑍁𑌣𑍈𑌰𑌾𑌵𑍃𑌤𑌾𑌃
𑌸𑍍𑌵𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌾𑌶𑍋𑌦𑍍𑌯𑌤𑌾𑌸𑍍𑌸𑌨𑍍𑌤𑌤𑌃 ॥ 5

𑌯𑌾𑌤𑍍𑌰𑌾𑌯𑌾𑌮𑍇 𑌨𑌜𑌯𑌾𑌽𑌵𑌤𑌾𑌵𑌤𑌾𑌰𑍇𑌶𑍍𑌵𑌰-
𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌹𑌂 𑌭𑌕𑍍𑌤𑌿𑌤𑍋 𑌶𑍍𑌰𑍂𑌷𑌾𑌶𑌾𑌸𑌨𑌮𑍍 ।
𑌕𑌶𑍍𑌵𑌯𑌜𑍍𑌞𑍋 𑌮𑌹𑌾𑌜𑍍𑌞𑍋 𑌹𑌿 𑌯𑍇 𑌸𑌜𑍍𑌜𑌨𑌾𑌃
𑌤𑌾𑌵𑍍𑌯𑌯𑌂 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑍇𑌹𑍇 𑌸𑌕𑌤𑌂 𑌵𑍇𑌤𑌵𑌿 ॥ 6

[தொடரும்]

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

" योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥ "

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ அழகியசிங்கரின் சென்னை விஜயம்

ஸ்ரீ அழகியசிங்கர், ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு சென்னைக்கு விஜயம் செய்த வ்ருத்தாந்தம் நமது ஸுஹ்ருத்துக்களெல்லாருக்கும் தெரிந்திருக்கலாம் பத்தந வாஸ நிர்ப்பந்தங்களையும் பந்தநத்தின் தாத்காலிக நிலைமையையும் உத்தேஶித்து ஒருகால் சென்னைக்கு எழுந்தருளாமலே மார்க்காந்தரமாக ஸ்ரீ மதுராந்தகத்திற்குத் திரும்ப எழுந்தருளிவிடும்படி இருக்குமோ வென்று சென்னை வாஸிகள் பயந்துகொண் டிருந்தார்கள். ஜந்மாந்தர ஸுக்ருத விஶேஷத்தின் பலமாக அவர்களுக்கு ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை ஸாக்ஷாத்தாக ஸேவிக்கவும், ஸ்ரீ அழகியசிங்கரையும் இதர பரிஜநங்களையும் ஆராதிக்கவும், பாக்யவிஶேஷம் கிடைத்தது. 'இப்பொழுது நேர்ந்துள்ள க்ஷோபத்தில் எப்படிச் சென்னை யாத்ரை ஸித்தி பெறும்? க்ரூரமான துர்ப்பிக்ஷத்தால் உணவுப்பொருள்களெல்லாம் மிகவும் துர்லபமாக இருக்கும்பொழுது எப்படி இந்தப் பெரிய ஆராதநத்தை நிறைவேற்றப் போகிறோம்?' என்று ஒரு ஸமயத்தில் நாமும் பயந்திருந்தோம். ஸ்ரீ ஶரண்யன் ஒருவனை அநுக்ரஹிக்கவேண்டு மென்று திருவுள்ளம் பற்றிவிட்டால் அதை யாரால் தடுக்கக்கூடும்? பயஹேதுக்களான ஸாமக்ரிகளெல்லாவற்றையும் கண் காணமல் தூர விலக்கி, இங்குள்ள ஆஸ்திக ஶிரோமணிகளுடைய ஹ்ருதயத்தில் உட்புகுந்து, தனது ஆராதநத்தைத் தனது பலத்தால் அவனே மிகவும் த்ருப்திகரமாக நிறைவேற்றிக் கொண்டான். ஒரு நாள் இரண்டு நாள் மாத்ர மின்றிக்கே, சற்றேறக்குறைய ஒரு மாஸ காலம் சென்னை அந்யாத்ருஶமான ஒரு மஹோத்ஸவத்தை அநுபவித்து வந்தது.

तदा महोत्सवो नृणां पुर्यामस्यां गृहे गृहे । अभूदनन्यभावानां श्रीनृसिंहे श्रियःपतौ ॥
नरा नार्यश्च मुदिताः प्रमृष्टमणिकुण्डलाः । पारिबर्हमुपाजह्रुर्गुरवे दैवताय च ॥
पुरीयं शुशुभे तत्र विचित्रांबरतोरणैः । प्रतिद्वारं परामृष्टरम्भापूगेन्द्रकेतुभिः ॥
स्त्रियो बालास्तथा वृद्धास्सर्वे मुमुदिरे तदा । दृष्ट्वा दृष्ट्वा श्रीनृसिंहं मुनिश्रेष्ठं प्रशस्य च ॥

*   *   *   *

சென்னையில் (திருவல்லிக்கேணியில்) எழுந்தருளியிருந்த காலத்தில் ஒருநாள் ஸ்ரீ அழகியசிங்கர் ஓர் உபந்யாஸம் செய்தருளும்படியாக ஸம்பவித்தது. "ஸநாதந தர்மம்" என்பது அந்த உபந்யாஸத்தின் விஷயமென்று பத்ரிகைகளில் ப்ரசுரம் செய்யப்பட்டிருந்த போதிலும், அது த்ரைவர்ணிகர்களாற் செய்யப்பட வேண்டியவை யென்று சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டுள்ள ஜாதகர்மாதி ஸம்ஸ்காரங்களைப் பற்றியும், விசேஷமாகப் பாஞ்சராத்ராதிகளில் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அஸாதாரணமாக விதிக்கப்பட்டுள்ள 'தாபம்' முதலிய பஞ்ச ஸம்ஸ்காரத்தைப் பற்றிய விஷயமாகவே இருந்தது. அன்று ஞாயிற்றுக் கிழமை; யாவர்க்கும் விராம திநம்; ஸ்ரீ தேசிகனுடைய வார்ஷிக மஹோத்ஸவத்தின் கடைசி திநத்தன்று திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமியின் திருவடி வாரத்தில் ஸ்ரீ அஹோபில மடத்து வாசலில் அது நடைபெற்றது. அநேக வித்வாங்களும் ப்ரபுக்களும் ஸாமாந்ய ஜநங்களும் ஸந்நிஹிதர்களாக இருந்தார்கள். ஸ்ரீ அழகியசிங்கரின் திவ்ய ஸூக்திகள் ஸகல ஜநங்களுக்கும் ஸ்பஷ்டமாகச் செவிக்கு எட்டும்பொருட்டு "Loud Speakers" என்று வ்யவஹரிக்கப்படும் ஒலிபரப்பிக் கருவிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. ஸ்ரீ தேசிகன் வீதிப் புறப்பாடு கண்டருளி ஸந்நிதிக்குள் எழுந்தருளினவுடன், ஸாயம் 7 மணிக்கு அந்த உபந்யாஸம் உபக்ரமிக்கப்பட்டு 9½-மணிக்கு முடிவு பெற்றது. அதன் வைபவத்தைப் பற்றிப் புகழ்ந்து பேசுவதற்கு நாம் ஸர்வ ப்ரகாரத்தாலும் அநர்ஹர்களே யாயினும், ஸ்ரீ உப. ஸுதர்சநாசார்ய ஸ்வாமி இந்த ஸஞ்சிகையில் மற்றோரிடத்தில் எழுதியிருக்கிறபடி, "மாசில் மனந்தெளிமுனிவர் வகுத்தவெல்லாம் மாலுகந்த வாசிரியர் வார்த்தைக்கொவ்வா" எனும் ஸ்ரீ தேசிகன் பாசுரம் இந்த உபந்யாஸ விஷயத்தில் ஸமக்ரம் அந்வித்ததென்று நாம் சொல்லத் துணிவோம்.

ஸ்ரீ அழகியசிங்கரின் உபந்யாஸம்

சென்ற 10-வது ஸஞ்சிகையில், நமது ஹிந்து மதத்தின் அஸாதாரணக் கொள்கையை உள்ளபடி அறியாமல் சில பெரியார்கள் கேவலம் தத்வ ஜ்ஞாநமும் பூததயை பரோபகாரம் முதலிய குணபூர்த்தியுமே சாச்வத ச்ரேயஸ்ஸுக்குப் போதுமான ஸாதநமென்று ப்ரமித்து தாம் அப்படி அநுஷ்டிப்பதுடன் அம்மாதிரி பிறர்களுக்கும் உபதேசிக்கிறார்களே என்று நாம் வருந்தி எழுதியிருந்தோம். ஆப்ரயாணம் நமக்கு உரிய கர்மாநுஷ்டாநங்களை சாஸ்த்ரங்கள் சொல்லும் முறையில் நாம் அநுஷ்டித்தல் வேண்டுமென்பதன்றோ நமது மதத்தின் உயிர் நிலையாகிற கொள்கை? உபாஸநத்திற்கு முக்ய அங்கமாகிற கர்மாநுஷ்டாநங்களைக் கைவிட்டால் அங்கியாகிற உபாஸநம் எவ்விதம் கைகூடும்? இப்பெரியார்கள் இந்தக் கர்மங்களை ஸ்வயம் அநாதரிப்பதுடன் மற்றவர்களும் அவைகளை அநாதரிக்கும்படி போதநம் செய்கிறார்களே!

இது என்ன பேதமை!

"यद्यदाचरतिश्रेष्ठस्तत्तदेवेतरो जनः"

வ்யபதிஷ்டர்களென்று பல பெயர்களால் கொண்டாடப்படும் பெரியோர்கள் எதை எப்படி அநுஷ்டிக்கிறார்களோ அதை அப்படியே மற்றை ஸாமாந்ய ஜநங்களும் அநுஷ்டிக்கிறார்களென்பது ஜகத் ப்ரஸித்தமன்றோ? இந்த உபதேசம் ஓங்கிவளர்ந்தால் ஜகத் க்ஷோபம் அடைந்து விடமாட்டாதோ? இதுதான் நமக்கு வருத்தத்தை ஜநிப்பித்தது.

இவ்வாறு நாம் வருந்திக்கொண்டிருக்கையில், இன்னும் பதின்மடங்கு அதிகமான வ்யதையைக் கொடுக்கக்கூடிய மற்றுமொரு ஸம்பவம் நேர்ந்தது. "இந்தியன் ரிவ்யூ" என்று ஒரு ஆங்கில மாதப் பத்ரிகை உண்டு. பாஶ்சாத்ய பாஷையில் நடைபெறும் பத்ரிகைகளுள் அது மிகவும் ஶ்ரேஷ்டமானது. அநேக வித்வான்கள் அடிக்கடி அநேக உத்க்ருஷ்ட விஷயங்களைப் பற்றி அதில் வ்யாஸங்களை எழுதி வருகிறார்கள். சென்ற ஸெப்டம்பர் மாஸத்தில் வெளிவந்த ஸஞ்சிகையில் கனம் ஸ்ரீநிவாஸ ஶாஸ்த்ரியார் (Rt. Hon'ble V. S. Srinivasa Sastriar) ஒரு வ்யாஸம் எழுதி யிருக்கிறார். அதில் தேஹத்தைக் காட்டிலும் வேறுபட்ட 'ஆத்மா' என்று சொல்லப்படும் வஸ்து ஒன்றில் தமக்கு நம்பிக்கை இருக்கிறதா இல்லையாவென்று ஒரு ஸம்ஶயத்தைக் கிளப்பிக் கொண்டு, அது விஷயமான தமது நிர்ணயத்தைப் பின் வருமாறு வெளியிட்டிருக்கிறார். "தேஹம் போனபிறகு ஆத்மாவென்று ஒரு விலக்ஷண வஸ்து ஶாஶ்வதமாக நிற்கிறதா இல்லையாவென்று என்னைக் கேட்டால், இல்லையென்றே நான் சொல்வேன். அப்படி ஆத்மா ஒன்று இருக்கிறது என்று சொல்வதற்குப் போதுமான ஸாக்ஷ்ய மொன்று மிராததே நான் அவ்விதம் சொல்வதற்குக் காரணம். மஹர்ஷிகளெல்லாரும் ஆத்மா உண்டென்று சொல்லி யிருக்கிறார்களே யென்றால், அவர்களுடைய ப்ரமம் அவர்களை அம் மாதிரி சொல்லும்படி செய்துவிட்டதென்றே நான் சொல்வேன். இக்காலத்தில் பௌதிக ஶாஸ்த்ரத்தில் ப்ரவீணர்களென்று அந்த ஶாஸ்த்ரஜ்ஞர்களால் பஹுமதிக்கப்பட்டு வரும் சில பெரியோர்களும் ஆத்மா உண்டென்று நிரூபித்திருக்கிறார்களே என்றால், அந்த நிரூபணம் இன்னும் ஸமக்ரமாகாமல் இருக்கிறதென்பதே எனது அபிப்ராயம்." இவ்வாறு ஜகத் முழுவதிலும் பரவும்படி அவர் அந்தப் பத்ரிகாமூலம் உத்கோஷித்திருக்கிறார். இதில் அபூர்வமானது ஒன்றுமில்லை. ஏற்கெனவே சார்வாக ப்ரப்ருதிகள் இதைக்காட்டிலும் பல மடங்கு தீவ்ரமாக நாஸ்திக வாதத்தை ப்ரசாரம் செய்திருக்கிறார்கள். அதற்கெல்லாம் தப்பிப் பிழைத்திருக்கும் நம்முடைய மதம் இதனால் பெரியதொரு தீங்கை அடையமாட்டாது என்பது உண்மையே. ஆனாலும் நாம் இதைப்பற்றிக் கவலைப்படுவதற்கு வேறு ஒரு காரணம் உண்டு. ஶாஸ்த்ரியார் ஸாமாந்யமான மனித

ரல்லர். அவர் தீக்ஷ்ணமான புத்தியை யுடையவர்; தேஶாந்தரங் களில் ஸஞ்சரித்து அதனுல் ஜகத்தின் ஸ்திதியை நன்ருக உணர்ந் தவர்; வஸ்துக்களின் குணதோஷங்களை எவ்வித ப்ரம விப்ரலம் பாதிக ளின்றிக்கே ஸமஞ்ஜஸமாகப் பரிஶீலநம் செய்யும் திறமை வாய்ந்தவரென்று அவருக்கு ஒரு க்யாதி உண்டு. மேலும் அவர், வயதில் முதிர்ந்தவர். இவைகளுடன் வாக்மித்வமும் அவரிடம் பூர்ணமாக உண்டு; ஆங்கில பாஷையில் அழகாகப் பேசுபவர்; ஸம்ஸ்க்ருத பாஷையிலும் அவருக்கு ஜ்ஞாந முண்டு; உயர்ந்த குலத்தில் ஜநித்து அதனுல் கிடைக்கக்கூடிய ஒரு விலக்ஷணமான புத்தி ஸம்ஸ்காரத்தையும் பெற்றவர். இந்தக் காரணங்களால் அவர் சொல்வதில் எவ்வித தவறுதலும் இருக்கமாட்டாது என்று ஸாமாந்ய ஜநங்களுக்கு ஒரு நம்பிக்கை உண்டு. கால ஸ்திதியும் அவரைப் போன்றவர்களுடைய வார்த்தைக்கு மதிப்பைக் கொடுக் கக்கூடியதாக இருக்கிறது. அநேக காரணங்களின் பயனுகப் பாஶ்சாத்ய நடை உடை பாவனைகளில் நமது ஜநங்களுக்கு ஒரு பெரும் வ்யாமோஹம் உண்டாகியிருக்கிறது. அவர்களுடைய பாஷையே சிறந்தது என்றும், அதில் சொல்லப்படும் விஷயங்களே தத்வங்க ளென்றும், அதை அழகாகப் பேசுபவர்களே நிபுணர்க ளென்றும் நம்பிக்கைக்குப் பாத்ரமென்றும் அநேகர் நினைத்திருக் கிருர்கள். அதிலும், நமது சிறுவர்களிடம் அது ஓங்கி நிற்கின்றது. இந்த ஸந்தர்ப்பத்தில் ஶாஸ்த்ரியாரைப்போன்ற பெரியார்கள் நாஸ்திக்யத்தை உபதேஶிக்க ஆரம்பித்தால் நமது தேஶத்தின் கதி தலை கீழாக மாறிவிடாதோ? நமது சிறுவர்களுக்கு ஜந்மாந்தர வாஸநை யடியாகவோ, பால்யத்தில் அவர்களுக்கு ப்ராப்தமாக இருந்த ஸம்ஸ்கார மடியாகவோ, ஏற்கெனவே நாஸ்திக்யத்தில் ஒரு ருசி பிறந்திருக்க, இவர்களும் அம்மாதிரி உபதேஶம் செய்ய ஆரம்பித்தால் அது அந்த ருசியை த்ருடப்படுத்திவிடு மன்ருே? இக்காலத்துச் சிறுவர்களே எதிர்காலத்தில் இவ்வுலகச் சுமையைத் தாங்கும் பெரியோர்களாவார்க ளாதலால் அக்காலத்தில் ஆஸ்திக் யம் எவர்களை ஆஶ்ரயித்து நிற்கும்? ஆஸ்திக்யமும் தைவ பக்தியும் நாஶம் அடையாமல் இருக்கவேண்டுமானுல், இக்காலத்துச் சிறுவர் களை நாஸ்திக ஸம்ஸர்க்கத்தால் தூஷிதராக் காமல் பாதுகாத்து வருவதே சரியான உபாயமாகுமன்ருே? அவர்களை நாம் உபே க்ஷித்துவிடுகிருேமே என்பதுதான் நமது ஶோகத்திற்குக் காரணம்.

இந்தத் துர்த்தஶையைப்பற்றி நாம் க்லேஶப்பட்டுக் கொண் டிருந்தபொழுது 'ஸ்ரீ அழகியசிங்கர் ஸநாதந தர்மத்தைப் பற்றி ஓர் உபந்யாஸத்தைச் செய்யப் போகிருர்' என்று கேள்விப்பட் டோம்; அது நமக்கு அளவற்ற ஆநந்தத்தை ஜநிப்பித்தது. கருணை நிதியான லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனே ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளத்தில் புகுந்து இந்த உபந்யாஸத்தைச் செய்வித்தானே என்றே நாம் நினைத்தோம். நாஸ்திகர்கள் எவை யெவைகளை இல்லையென்று நிரா கரித்தார்களோ, எவை யெவைகளை அப்ரதாநங்களென்று அநா

தரித்தார்களோ, அவையெல்லாம் உண்டென்றும் அவைகளே ப்ரதானங்க ளென்றும் ஸ்ரீ அழகியசிங்கரின் உபந்யாஸத்தில் வற்புறுத்தப்பட்டன. தேஹத்தைக் காட்டிலும் விலக்ஷணமான 'ஆத்மா' என்னும் ஒரு தத்வ முண்டென்றும், ஶரீரம் ஹநநம் செய்யப்படும் பொழுது ஆத்மா எவ்வித ஹநநத்தையும் அடைகிற தில்லை யென்றும், ஆத்மாவை ஶுத்தமாக வைத்துக்கொண்டால் மாத்ரம் நமக்கு முக்தி ஸாதநமாகிற உபாஸநத்தில் அதிகாரம் ஸம்பவிக்கு மென்றும், அந்த ஶுத்தியைச் செய்யக்கூடிய காரண ஸாமக்ரிகளுள் யஜ்ஞமென்றும் தாநமென்றும் தபஸ்ஸென்றும் சொல்லப்படும் ஸ்வ ஸ்வ வர்ணத்திற்குத் தகுந்த நியத தர்மங்களை ஶாஸ்த்ரங்களில் விதித்திருக்கிறபடி தேஹமுள்ள வரையில் விடாமல் அநுஷ்டித்து வருவதே முக்யமென்றும் ஸ்ரீ அழகியசிங்கர் ப்ரமாண புரஸ்ஸரமாக ஸாமாந்ய ஜநங்களுக்கும் தெளிவாக விளங்குமாறு விவரித்தார். உபபாதநத்தின் ஸாதுத்வத்துடன் கூட அவருடைய ஸ்தாநமும் அந்த உபதேஶத்திற்கு ஒரு ஶக்தி விஶேஷத்தைக் கொடுத்தது. சார்வாக மதம் கொந்தளிக்கும் இக் காலத்தில், ஸர்வாந்ந பக்ஷணம் கூடாதென்றும் நமக்கு அஸாதாரண சிந்ஹங்களான ஶிகை யஜ்ஞோபவீதம் தாபம் புண்ட்ரம் இவையெல்லாவற்றையும் அவஶ்யம் தரிக்கவேண்டு மென்றும் நாம் உபதேஶிக்க ஆரம்பித்தால் யார் அதைச் செவி கொடுத்துக் கேட்பார்கள்? ஜகதாசார்யகம் செய்யும் ஸ்ரீ அழகியசிங்கரைப் போன்ற மஹாங்களுடைய முகத்திலிருந்து அவை வெளிவந்தாலன்றோ அவைகளுக்கு ஒரு ஶக்தி விஶேஷ மிருக்கும்? ஶாஸ்த்ரி ப்ரப்ருதிகளின் உபதேஶத்தால் சலநத்தை அடைந்துள்ள மந்த மதிகளையும் நிலை நிறுத்துவதற்கு அதுவே யன்றோ ஶக்தமாகும்? இம்மாதிரி மடாதிபதிக ளெல்லாரும் அடிக்கடி தர்ம விஷயமாக உபந்யாஸங்களைச் செய்து நாஸ்திக்யத்தை வளரச் செய்யும் ப்ராந்தர்களைக் கண்டித்து வரும்படி ஸ்ரீ ஶரண்யன் அநுக்ரஹிக்க வேண்டுமென்று நாம் ப்ரார்த்திக்கிறோம்.

* * * *

இந்த உபந்யாஸத்தின் முடிவில், ஸ்ரீ அழகியசிங்கர், தம்மால் ப்ரதிபாதிக்கப்பட்ட ஶ்ருதி ப்ரபந்நங்களான பஞ்ச ஸம்ஸ்கார விஷயங்களை ப்ரமாண ஶரணர்களான எல்லாரும் அங்கீகரிக்க வேண்டியவர்களே என்று ஸாதித்து விட்டு, கடைசியில், விளம்பமின்றிக்கே மோக்ஷத்தைப் பெறும் விஷயத்தில் மற்றை ஸித்தாந்தங்களுக்கும் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்திற்கு முள்ள விசேஷங்களை ப்ரஸ்தாவித்தார். அப்பொழுது அர்ச்சிராதியான ஆதிவாஹிக கணமானது உபாஸகர்களை ஹிரண்ய கர்ப்பனுடைய லோகத்திற்கே நயப்பிக்கின்றதென்றும், அந்த உபாஸகர்கள் ஹிரண்யகர்ப்பனுடன் கூட முக்தியை அடைகிறார்களென்றும்

க்ரம முக்தி

ஸாக்ஷாந் முக்தி

அப்படி அவர்களும் முக்தியை அடைகிறபடியால் அவர்களுக்கு முக்தத்வ வ்யபதேஶம் கூடுமென்றும் த்வைத ஸித்தாந்திகள் அபிப்ராயப் படுகிறார்களென்று அநுக்ரஹித்தருளினர். இதை அநுக்ரஹிக்கும் காலத்தில் ஸ்ரீ அழகியசிங்கர், 'அந்த உபாஸகர்கள் ஹிரண்ய கர்ப்பனுடைய லோகத்திற்குப் போய் அவ்விடத்தில் ஸ்வல்ப காலம் தங்குகிறார்கள்' என்னும் அர்த்தத்தைப் பின்வருமான ரீதியில் வெளியிடும்படி இருந்தது. 'அந்த உபாஸகர்கள் தமது சரமதேஹ வியோகம் நேர்ந்தவுடன் ஸாக்ஷாத்தாக மோக்ஷம் பெறவில்லை; ஹிரண்ய கர்ப்பனுடைய லோகம் போய், அவனுடைய விவ்ருதமான முகத்தில் புகுகிறார்கள். அவனுடைய குக்ஷியில் ஸ்வல்ப காலம் வஸித்துப் பிறகு அந்த ஹிரண்ய கர்ப்பனுடன்கூட முக்தியைப் பெறுகிறார்கள்' என்பதுதான் அந்த ரீதி. இதைக் கேட்டுக்கொண்டிருந்த ஸ்ரீ நாகராஜ ஶர்மா வென்னும் ஒரு மாத்வ வித்வான் மறுதினம் ஹிந்துப் பத்ரிகையில் ஸ்ரீ அழகிய சிங்கரின் உபந்யாஸத்தின் ப்ரசாரத்தையும் உபந்யஸிக்கப்பட்ட விஷயங்களின் ஸாதுத்வத்தையும் முதலில் ப்ரஶம்ஸித்துப் பேசி விட்டு, பிறகு க்ரமமுக்தி ஸாக்ஷாந்முக்தி வாதத்தை ப்ரஸ்தாவித்து "**सह ब्रह्मणा विपश्चिता**" என்று ஶ்ருதி க்ரமமுக்தியே ப்ரமாணமென்று சொல்லுகிறபடியால் ஸாக்ஷாந் முக்திவாதத்தை ஸ்ரீ அழகிய சிங்கர் ஶ்லாகித்துப் பேசினது தவறுதலென்றும், உபாஸகர்கள் ஹிரண்ய கர்ப்பனுடைய விவ்ருதமான முகத்தில் ப்ரவேஶித்து அவனுடைய குக்ஷியில் வஸிக்கிறார்களென்று சொன்னதும் அநுசிதமென்றும் கண்டித்து லேகமொன்றை எழுதி யிருந்தார். அவர் எவ்வித வைஷம்யத்தையும் பாராட்டாமல் உபந்யாஸத்தில் இருந்த குண பாகங்களை ஶ்லாகித்து எழுதினதை நாம் ஆமோதிக்கிறோம்; க்ரமமுக்தி ஸாக்ஷாந் முக்திவாதத்தில் அவர் ப்ரவர்த்தித்ததையும் உபாஸகர்கள் ஹிரண்ய கர்ப்பனுடைய முகத்தில் ப்ரவேஶிக்கிறார்களென்று சொல்வதில் அவர் உணரும் ந்யாய விரோதத்தையும் நாம் ஆமோதிக்கவில்லை. க்ரமமுக்தி ஸாக்ஷாந் முக்திவாதம் இப்பொழுது உண்டானதன்று. அவைகளின் ப்ராமாணிகத்வ அப்ராமாணிகத்வத்தைப் பற்றி வித்வான்களுள் பஹுகாலமாக அபிப்ராய பேதமுண்டு. ஸ்ரீ அழகியசிங்கர் க்ரமமுக்தியைக் கண்டிக்க ப்ரயத்நப்படவில்லை; இரண்டு ஸித்தாந்திகளுக்கும் இந்த அம்ஶத்தில் விஶேஷமுண்டு என்று மாத்ரம் அநுக்ரஹித்தார். அவைகளுள் எது ப்ராமாணிக மென்பதை விசாரிக்க ப்ராப்தமாக இருக்கையிலும் இப்பொழுது அதற்கு அவகாஶமில்லையாதலால், அதில் நாம் ப்ரவர்த்திக்கவில்லை. இரண்டாவது, உபாஸகர்கள் குக்ஷியில் ப்ரவேஶிக்கிறார்களென்று சொல்வதைப்பற்றி ஸ்ரீ ஶர்மா ஏன் வருந்துகிறார் என்பது நமக்கு விளங்கவில்லை. அப்படிச் சொல்வது ஒரு நிந்தை யாகமாட்டாதென்பது, ப்ரளய காலத்தில் சேதநாசேதநங்களனைத்தையும் ஸ்ரீமந்நாராயணன் தனது குக்ஷியில் வைத்து ஸம்ரக்ஷிக்கிறான் என்று ஶாஸ்த்ரங்கள்

பேசுவதிலிருந்து விளங்கும். ஸ்ரீ ஶர்மா இந்த இரண்டு அம்ஶங்களையும் ப்ரஸ்தாவியாமல் இருந்திருந்தால் அவருடைய லேகம் மிகவும் ஸரஸமாக இருந்திருக்கும் என்பது நம்முடைய அபிப்ராயம்.

* * * *

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையை ஆரம்பிக்கும் காலத்தில், ஒவ்வொரு மாஸத்திலும், அந்தந்த மாஸத்தில் நடைபெறவேண்டிய உத்ஸவாதிகளையும், ஸந்திக்தமாக இருக்குமிடங்களில் திதிகளின் நிர்ணயத்தையும் குறித்துப் "பஞ்சாங்க ஸங்க்ரஹம்" என்னும் பெயருடன் குறிப்பொன்றை ஸ்ரீ ஸந்நிதியின் பெயரால் ஸ்ரீ ஸந்நிதி வித்வாங்களுடைய ஸஹாயத்தை அவலம்பித்து 'ப்ரியையில்' ப்ரசுரம் செய்யலாமென்று ஸ்ரீ ஸந்நிதியில் விண்ணப்பம் செய்துகொண்டோம். ஸ்ரீ அழகியசிங்கரும் அதை ஆமோதித்தருளினர். ஆனல் அம்மாதிரி ஒரு ஸங்க்ரஹத்தை எழுதி அனுப்பப் பல நிர்ப்பந்தங்களால் ஸந்நிதி வித்வான்களுக்கு ஸாத்யமிராமல் போயிற்று. அம்மாதிரி ஸங்க்ரஹம் பல பெயர்களுக்கு உபகாரகமாக இருக்குமென்று நமக்குத் தோன்றினபடியால், நாம் தர்ம ஶாஸ்த்ரம் தெரிந்த வேறு ஒரு வித்வானைக் கொண்டு அதை வெளியிட்டு வந்தோம். இரண்டு மாஸங்களுக்கு முன் அதில் அநவதாநமடியாக ஒரு தவறுதல் நேரவே, அதைத் தகுந்த அதிகாரிகளைக் கொண்டு ப்ரசுரிப்பதே உசிதமாகுமென்று எண்ணி, ஸந்நிதி ஸம்பந்தம் பெற்றுள்ள இரண்டொரு வித்வான்களை அணுகி ப்ரார்த்தித்தோம். அவர்கள் அந்த ப்ரார்த்தனையைத் திருவுள்ளம் பற்றுமல் இருக்கவே, நாம் அந்த ஸங்க்ரஹம் ப்ரசுரிப்பதை நிறுத்தும்படி ஸம்பவித்தது. இப்பொழுது அநேகச் சந்தாதாரர்கள் அதை நிறுத்தக்கூடாதென்று கடிதம் எழுதி யிருக்கிறபடியால் மறுபடியும் அதை ப்ரசுரிக்க ஆரம்பித்திருக்கிறோம்.

* * * *

சந்தாதாரர்களுக்கு விஜ்ஞாபநம்

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையின் இரண்டாவது வருஷம் அடுத்த மாஸத்தோடு முடிவுறுகின்றது. சந்தாதாரர்களுள் பலர் இன்னும் சந்தாவைச் செலுத்த க்ருபை செய்யவில்லை. இந்த வர்ஷம் முடிவு பெறுவதற்கு முன்னதாகவே அவர்கள் தமது சந்தாவை அனுப்பினல் ஸௌகர்யமாக இருக்குமென்று இதனல் விண்ணப்பம் செய்துகொள்ளுகிறோம்.

यतश्चोदेति सूर्यो अस्तं यत्र च गच्छति ।
तन्देवास्सर्वेऽर्पितास्तदु नात्येति कश्चन ॥ एतद्वै तत् ॥ ९ ॥

यदेवेह तदमुत्र यदमुत्र तदन्विह ।
मृत्योस्स मृत्युमाप्नोति य इह नानेव पश्यति ॥ १० ॥

---

9. [ப - ரை.] **यतः** - எதனிடமிருந்து [எந்த ப்ரஹ்மத்தினிடமிருந்து], **सूर्यः**-ஸூர்யன், **उदेति** - உதயத்தைப் பெறுகிருனே, **यत्र** - எந்த ப்ரஹ்மத்தினிடத்தில், **अस्तम्** - அஸ்தமநத்தை, **गच्छति** - அடைகிருனே, **तम्** - அந்த ப்ரஹ்மத்தினிடத்தில், **सर्वे देवाः** - எல்லாத் தேவதைகளும், **अर्पिताः** - ப்ரதிஷ்டிதர்களாக இருக்கிருர்கள். **तत्** - அந்தப் பரமாத்மாவை, **कश्चन** - ஒருவரும், **नात्येति** - அதிக்ரமிக்கிருரில்லே. **एतद्वै** - இந்த ஸூர்யன் முதலிய தேவர்களின் ஸ்வரூபமும், **तत्** - அந்த ப்ரஹ்மத்தையே ஆத்மாவாக உடையதே.

---

10. இப்படி பஹு ப்ரகாரமாக 'ஸர்வத்துக்கும் பரமாத்மாவே ஆத்மா' என்று பரமாத்மாவுக்கு ஸர்வாத்மத்வத்தை ப்ரபஞ்சித்துவிட்டு, 'அது எப்படி உபபந்நமாகும்?' என்று ஆக்ஷேபிப்பவர்களுக்கு ஸமாதாநம் சொல்லுகிருர் இந்த மந்த்ரத்தில். **'य इह नानेव पश्यति'** [பரமாத்மாவினிடத்தில் எவன் பேதத்தைப் பார்க்கிருனே அவன் ஸம்ஸாரத்திலேயே உழன்று கொண்டிருப்பான்] என்று சொல்வதைப் பார்த்தால், எல்லாம் ஒன்று என்னும் மதம் வற்புறுத்தப்படுவது போலத் தோன்றும். அடுத்துவரும் மந்த்ரத்திலும் **'नेह नानास्ति किञ्चन'** [பேதம் என்பதே இல்லே] என்று சொல்லப்படுகின்றது. ஆனல், இப்படி ஸ்வரூபைக்யம் இவ்விடத்தில் உபதேசிக்கப்படுகின்றது என்று சொல்வது ப்ரகரணத்திற்கு ஒத்ததன்று என்பதும், மற்றை இடங்களில் செய்யப்படும் பேத உபதேசத்திற்கு அத்யந்தம் விருத்தம் என்பதும், ஶரீர ஶரீரி பாவத்தை அவலம்பித்து இந்தப் பேத நிஷேதத்திற்கு அர்த்தம் செய்வதே ஸமஞ்ஜஸமென்பதும் சற்று ஊன்றிப் பார்ப்பவர்களுக்கு நன்கு விளங்கும்.

இவ்விடத்தில் ஶங்கிக்கப்படும் ஶங்கையாவது: 'பரமாத்மாவே என்னுடைய ஆத்மா' என்னும் தோற்றம் அஸங்கதம். ஆத்மாவானது நான் என்று அஹந்தைக்கு ஆஶ்ரயமாகவன்றே எல்லாராலும் அநுஸந்திக்கப்படுகின்றது? அந்த நான் என்னும் தோற்றம் 'நான் இவ்விடத்தில் இருக்கிறேன்; இந்த இடத்தைக் காட்டிலும் பிந்நமான வேருேர் இடத்தில் இல்லே' என்று தேஶாந்தர வ்யாவ்ருத்தமாகவே உண்டாகக் கூடியதன்றே? அப்படிப்பட்ட தோற்றம் உண்டாகுமவனுக்கு 'ஸர்வ தேஶங்களிலும் ஸர்வ காலங்களிலும் இருக்குமதான பரமாத்மாவே என்னுடைய அந்தராத்மா' என்னும் தோற்றம் எப்படி உண்டாகும்? இதுதான் ஆக்ஷேபம். இதற்கு, 'பரஸ்பரம் விருத்தங்களான இம்மாதிரி

मनसैवेदमाप्तव्यन्नेह नानाऽस्ति किञ्चन ।
मृत्योस्स मृत्युं गच्छति य इह नानेव पश्यति ॥ ११ ॥

தோற்றங்கள் தோன்றுவதற்கு ஸம்பாவனையே இல்லை' என்பதே ஸமாதாநம். அது எப்படி என்றால்: தத்வத்தை உணர்ந்தவர்களுக்கு நான் என்னும் தோற்றம் ஜீவ விசிஷ்டமான பரமாத்மாவையே விஷயமாக உடையதாதலால், 'ஸங்குசிதமான ஓரிடத்தின் ஸம்பந்தத்தைப் பெற்றவன் நான்' என்னும் தோற்றம் ஜநிக்கவே மாட்டாது. அவர்களுக்கு 'நானே மநு, நானே ஸூர்யன்' என்று, வாமதேவருக்குத் தோன்றினது போல, பரமாத்மாவானது எல்லா வஸ்துக்களிலும் எவ்விடத்திலும் இருப்பதாகவன்றோ தோற்ற முண்டாகும்? தத்வத்தை உணராதவர்களுக்கோ வென்றால் நான் என்னும் தோற்றம் ஜீவனையே விஷயமாக உடையது. அவர்களுக்குத் தாம் ஒரு குறிப்பிட்ட தேசத்தில் இருப்பதாகவே தோற்றம் உண்டாகும். அவர்களுக்குப் பரமாத்மாவின் தோற்றமில்லை யாகையால், ஸர்வ தேசத்திலும் ஸர்வ காலத்திலும் இருக்கும் பரமாத்மாவின் தோற்றத்தால் உண்டாகக்கூடிய விரோதத்திற்கே இடம் இல்லை. இந்த விரோதாபாவத்தை அவலம்பித்தே இந்த மந்த்ரம் பேசுகின்றது.

[ப - ரை] इह - இந்த லோகத்தில், यत् எதுவோ [எந்தப் பரமாத்ம தத்வமானது 'நான்' என்னும் அநுஸந்தாநத்திற்கு விஷயமோ], तदेव - அதுவே, अमुत्र - லோகாந்தரத்தில் இருப்பவர்களுக்கும் ஆத்மா. यत् - எது, अमुत्र - லோகாந்தரத்தில் இருப்பவர்களுக்கு ஆத்மாவோ, तत् - அதுவே, इह - இந்த லோகத்தில் ஏற்படும் அநுஸந்தாநத்திற்கு விஷயம். [ஆகையால்] यः - எவன், इह - இவ்விடத்தில், नाना इव - அந்த இரண்டும் வெவ்வேறாக இருப்பதுபோல, पश्यति பார்க்கிறானோ [அதாவது: இந்த உண்மையை அறியவில்லையோ], सः - அவன், मृत्योः - ஸம்ஸாரத்திலிருந்து, मृत्युम् - ஸம்ஸாரத்தையே, आप्नोति - அடைகிறான். [அதாவது: அவனுக்கு ஸம்ஸார பந்தம் விலகாமலே நிற்கின்றது.]

---

11. இப்படி எல்லாவற்றுக்கும் அந்தராத்மாவாக இருக்கும் பரமாத்ம தத்வத்தை நாம் எப்படி அடையக்கூடுமென்றால், அது விசுத்தமான மநஸ் ஒன்றாலேயே க்ரஹிக்கத் தகுந்தது என்று இந்த மந்த்ரம் சொல்லுகின்றது.

[ப - ரை] इदम् - இந்த ஆத்ம ஸ்வரூபமானது, मनसैव - மநஸ்ஸாலேயே [அதாவது: விசுத்தமான மநஸ்ஸினால் மாத்ரம்], आप्तव्यम् - க்ரஹிக்கத்தகுந்தது. इह - இவ்விடத்தில், नाना - பிந்நமாக [அதாவது - அப்ரஹ்மாத்மகமாக], किञ्चित् - ஒன்றும், नास्ति - இல்லை. [மற்றவை கீழ்மந்த்ரத்திற்போலவே. ஏற்கெனவே சொல்லப்பட்ட அர்த்தத்தை த்ருடமாகச் செய்வதற்காக இவ்விடத்தில் மறுபடியும் அது சொல்லப்படுகிறது.]

अङ्गुष्ठमात्रः पुरुषो मध्य आत्मनि तिष्ठति ।
ईशानो भूतभव्यस्य न ततो विजुगुप्सते ॥ एतद्वै तत् ॥ १२ ॥

---

12. அந்தப் பரமாத்மா உபாஸகர்களை அநுக்ரஹிக்கும் பொருட்டு அவர்களுடைய ஹ்ருதயத்தில் ஸந்நிஹிதனாகவும், அந்த ஹ்ருதயத்தில் இருக்கிறபடியால் அந்த ஸ்தாநத்திற்கு அநுகுணமான ஆக்ருதியுடன் கூடினவனாகவும் இருக்கிறானென்று இந்த மந்த்ரம் சொல்லுகின்றது. மநுஷ்யர்களுடைய ஹ்ருதயம் அவர்களுடைய அங்குஷ்ட அளவு உள்ளதாம்; ஆகையால் அந்தப் பரமாத்மாவும் அந்த அங்குஷ்ட அளவு உள்ளவனாக அவ்விடத்தில் இருக்கிறானாம். மநுஷ்யர்களே உபாஸநத்திற்கு அதிகாரிகளாகிறபடியால், அவர்களுடைய ஹ்ருதயத்தில் அந்த அளவு உள்ளவனாக இருக்கிறான் என்பதைப்பற்றி மாத்ரம் இவ்விடத்தில் ப்ரஸ்தாவிக்கப்படுகிறது. அங்குஷ்ட மிராத குதிரை முதலிய ம்ருகங்களுக்கு உபாஸநாதிகாரம் இல்லையாதலால், அவைகளைப்பற்றி இவ்விடத்தில் ப்ரஸ்தாவமில்லை.

[ப - ரை] **भूतभव्यस्य** - இறந்த காலம் எதிர்காலம் [நிகழ்காலம்] இம்மூன்று காலங்களிலும் இருக்கும் ஸகல சேதநாசேதந வர்க்கத்திற்கும், **ईशानः** - ஈஶ்வரனாக [நியந்தாவாக] இருக்கும், **पुरुषः** - [பரம புருஷன், **मध्य आत्मनि** - [உபாஸக] சரீரத்தின் நடுவில், **अंगुष्ठमात्रः** – அங்குஷ்டம் [அதாவது: கட்டைவிரல்] அளவு உள்ளவனாக, **तिष्ठति** இருக்கிறான். **ततः** – அப்படி அவன் ஈஶ்வரனாக இருக்கிறபடியால், **न विजुगुप्सते** - [அங்கு இருப்பதில்] ஜுகுப்ஸை அடைகிறானில்லை. அதாவது: வாத்ஸல்யாதிஶயத்தால் உபாஸகர்களுடைய தேஹத்தில் இருக்கும் தோஷங்களொன்றையும் பாராட்டாமல் அவைகளைப் போக்யம் போலவே பாவித்து வருகிறான்.

இவ்வாறு இந்த மந்த்ரத்தைப் பரமாத்ம பரமாகவே நமது ஆசார்யர்கள் நிர்வஹித்திருக்கிறார்கள். இந்த மந்த்ரத்தில் சிலர் ஜீவாத்மாவே ப்ரதிபாதிக்கப்படுகின்றது என்று ஆக்ஷேபிப்பது உண்டு. மற்றும் சிலர், 'இந்தக்கடவல்லி முழுவதும் பஶுபதி என்னும் தேவதா விஶேஷத்தைப் பரதேவதையாகப் பேசுகின்றது. அப்படி அது பேசுகின்றது என்பது இந்த மந்த்ரத்தால் நன்கு ஏற்படும்' என்று சொல்வார்கள். இவையெல்லாம் உபபந்நங்களல்ல வென்பது மேற் சொல்லப்படப்போகும் ஹேதுக்களால் விளங்கும்.

முதலில், ஜீவாத்ம விஷயமென்று கொள்பவர்களின் வாதத்தைக் கவனிப்போம். அவர்கள் சொல்வதாவது :—'இந்த மந்த்ரத்தில் ப்ரதிபாதிக்கப்படும் வஸ்து அங்குஷ்ட அளவு உள்ளது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அளவு ஜீவாத்மாவுக்கே உண்டு என்று ஶ்ருதி ஸ்ம்ருதிகளிலிருந்து ஏற்படுகிறபடியால், அதே அளவைச் சொல்லும் இந்த

உபநிஷத்தும் அந்த ஜீவாத்மாவையே குறிக்கவேண்டும் என்பதுதான். அவர்கள் உதாஹரிக்கும் ஶ்ருதி வாக்யமாவது :—"**प्राणाधिपस्सञ्चरति स्वकर्मभिरंगुष्ठमात्रः**" [ப்ராணாதிபனாக இருக்குமவன் தனது கர்மங்களால் அங்குஷ்ட அளவுள்ளவனாக ஸஞ்சரிக்கிறான்]. இதில் 'ப்ராணாதிபன்' என்றும் 'தனது கர்மங்களினால்' என்றும் தென்படும் நிர்த்தேஶங்கள் இது ஜீவாத்ம விஷயமே என்பதை நிராக்ஷேபமாகத் தெரிவிக்கின்றது. ஸ்ம்ருதியும், "**अंगुष्ठमात्रं पुरुषं निश्चकर्ष यमो बलात्**" [அங்குஷ்ட அளவுள்ள புருஷனை யமன் பலாத்காரமாக இழுத்தான்] என்று ஜீவாத்மாவையே அங்குஷ்ட அளவு உள்ளவனாகப் பேசுகின்றது. இவை இம்மாதிரிப் பேசினாலும், '**भूतभव्यस्येशानः**' [ஸகலத்திற்கும் ஈஶ்வரன்] என்றுசொல்லப்பட்டிருக்கிறபடியால், அஸங்குசிதமான நியமநஶக்தியையுடைய பரமாத்மாவே இவ்விடத்தில் விவக்ஷிதன் என்று சொல்லலாமோ வென்றால், முதலிற் சொல்லப்பட்டுள்ள ஜீவ லிங்கமாகிற அங்குஷ்ட பரிமாணத்வம் பலீயஸ் ஆதலால், பின்வரும் 'எல்லாவற்றுக்கும் ஈஶ்வரன்' என்பதைக் கொஞ்சம் ஸங்கோசித்துக்கொள்வதே உசிதமாகு மன்றோ? 'தன்னைக்காட்டிலும் நிக்ருஷ்டமாக இருக்கும் ஸகலத்திற்கும் ஈஶ்வரன்' என்று அர்த்தம் சொல்லவேண்டுமே தவிர்த்து, உபக்ரமத்திற் சொல்லப்பட்டதற்கு விருத்தமாக அர்த்தம் செய்வது ஶாஸ்த்ர ஸம்மத மாகமாட்டாது. இதுதான் இவர்கள் செய்யும் ஆக்ஷேபம்.

இதற்கு ஸமாதாநமாவது :—'அங்குஷ்ட பரிமாணவத்வம் ஜீவனுக்கு மாத்ரமே, பரமாத்மாவுக்கு அது இல்லை' என்று சொல்வது சரியன்று. அந்தப் பரிமாணவத்வம் பரமாத்மாவைப்பற்றியும் பேசப்பட்டிருக்கின்றது. "**अंगुष्ठमात्रः पुरुषोऽगुष्ठञ्च समाश्रितः**" என்று தைத்திரீய உபநிஷத்திலும், "**अंगुष्ठमात्रः पुरुषोऽन्तरात्मा सदा जनानां हृदये सन्निविष्टः**" என்று ஶ்வேதாஶ்வதரோபநிஷத்திலும் அங்குஷ்ட மாத்ரத்வம் பரமாத்மாவுக்கும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால், இரண்டு புருஷர்கள் விஷயத்திலும் அங்குஷ்ட பரிமாணவத்வம் ஔபாதிகமே. ஜீவன் அத்யந்த அணுபரிமாண முள்ளவன் என்று

"**वालाग्रशतभागस्य शतधा कल्पितस्य च। भागो जीवस्य विज्ञेयः**"

என்று ஸ்ரீஶ்வேதாஶ்வதர உபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடியால், அந்த ஜீவனுக்கு அங்குஷ்ட பரிமாணவத்வம் அவன் வஸிக்கும் ஹ்ருதயத்திற்குத்தகுந்தபடியாக ஔபாதிகமென்றே சொல்லவேண்டும். பரமாத்மாவுக்கும், விபுவான அவன் உபாஸகனுடைய ஹ்ருதயத்தில் இருக்கிறானென்று சொல்லப்பட்டிருக்கிறபடியால், அந்த உபாஸகருடைய ஹ்ருதயங்கள் அவரவர்களுடைய அங்குஷ்டத்தின் அளவை யுடையவையானபடியால் அதற்குத் தகுந்தபடி அங்குஷ்ட பரிமாணவத்வம் அவனுக்கும் ஔபாதிகமென்றே சொல்லவேண்டும். இப்படிஅங்குஷ்ட பரிமாணவத்

வம் ஜீவாத்மா பரமாத்மா என்னும் இருவருக்கும் ஸாதாரணமாக இருக்கிறபடியால் அதைக்கொண்டு ப்ரக்ருத விவாதத்தை நிர்ணயிப்பது ஸாத்யமில்லை. அஸங்குசிதமான பூதபவ்ய ஈஶித்ருத்வமோ பரமாத்மாவுக்கே அஸாதாரணம். அந்த ஈஶித்ருத்வம் இவ்விடத்தில் நிர்த்தேஶிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அந்த ஈஶித்ருத்வ நிர்த்தேஶ பலத்தைக் கொண்டு அங்குஷ்ட ப்ரமிதனென்று சொல்லப்படும் புருஷன் பரமாத்மாவே என்று நிர்ணயம் செய்யப்படுகின்றது.

நிற்க: இந்த அத்யாயத்திலேயே "**यदिदं किञ्च जगत्सर्वं**" [2-6-2] 'அங்குஷ்ட ப்ரமிதனை புருஷனிடமிருந்து பயந்து ஸகல ஜகத்தும் நடுங்குகின்றது' என்று சொல்லப்படுகிறது. இப்படி ஜகத் முழுவதையும் நடுங்கச்செய்யும் ஶக்தியானது பரமாத்மாவுக்கே அஸாதாரண மென்பது "**भीषास्माद्वातः पवते**" இத்யாதியான தைத்திரீய உபநிஷத் வாக்யத்திலிருந்து வ்யக்தமாகின்றது. மேலும், அடுத்த வல்லியில் '**न तत्र सूर्यो भाति न चन्द्रतारकम्**" [2-5-15] 'இந்த அங்குஷ்ட ப்ரமிதனை புருஷனுக்கு ஸூர்ய சந்த்ராதிகளின் தேஜஸ்ஸை மறைக்கக்கூடிய ஒரு தேஜோ விஶேஷம் இருக்கின்றது' என்று சொல்லப்படுகின்றது. இப்படிப்பட்ட தேஜோ விஶேஷம் பரமாத்மாவுக்கே அஸாதாரண மென்பது "**तं देवा ज्योतिषां ज्योतिः........येन सूर्यस्तपति तेजसेद्धः**" இத்யாதியான ப்ருஹதாரண்யக உபநிஷத் வாக்யத்திலிருந்து வ்யக்தம். இம்மாதிரியான ஹேதுக்களால் இந்த மந்த்ரத்தில் ப்ரதிபாதிக்கப்படும் புருஷன் பரமாத்மாவே என்பது ஸித்தம்.

இரண்டாவது: இந்த வாக்யத்தில் தென்படும் 'ஈஶாந' என்னும் ஶப்த பலத்தைக்கொண்டு இந்தக் கடோபநிஷத் முழுவதும் பசுபதியாகிற தேவதா விஶேஷத்தையே ப்ரதிபாதிக்கின்றது என்று வாதிப்பவர்களின் உபபாதநங்களைப் பராமர்ஶிப்போம். அவர்கள் சொல்வதாவது:—
'**ईश्वरश्शर्व ईशानः**' என்னும் நிகண்டு பாடத்தால் 'ஈஶாந' என்னும் ஶப்தம் பஶுபதி என்னும் தேவதா விஶேஷத்தில் ரூடமாய் அதையே பொருளாகக் கொண்டிருக்கிறது. ரூடியான பொருள் ஒத்து வருகையில் அதைக்கைவிட்டு யௌகிகமாக அர்த்தம் செய்வது ஶாஸ்த்ர ஸம்மதமாக மாட்டாது. "**तद्विष्णोः परमं पदम्**" இத்யாதியான இடத்தில் 'விஷ்ணு' என்னும் தேவதை ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறதே என்றால், அந்த வாக்யத்திற்கு 'அது விஷ்ணுவின் ஸ்வரூபமே' என்பது பொருளன்று; [**विष्णोः स्वरूपादपि परमं उत्कृष्टम्**] விஷ்ணுவை ஒரு எல்லையாகச் சொல்லி 'அதைக்காட்டிலும் உயர்ந்தது பஶுபதியென்னும் தேவதா விஶேஷத்தின் ஸ்வரூபம்' என்பதே அதன்பொருள். இவ்வாறு நிர்ணயம் ஏற்படுகிறபடியால், பரமாத்ம ஸ்வரூபத்தை ப்ரதிபாதிக்கும் மற்றை வாக்யங்களுக்கு இதற்கு அநுகுணமாகப் பொருள்படுத்திக்கொண்டு, இந்த உபநிஷத் முழுவதும் பசுபதியாகிற தேவதா விஶேஷத்தையே ப்ரதிபாதிக்கின்றது என்றே சொல்லவேண்டும். இதுதான் இவர்கள் செய்யும் வாதம்.

இதைக் காட்டிலும் பலீயஸ்ஸாக இன்னும் ஒரு ஹேதுவையும் அவர்கள் சொல்லுகிறார்கள். அது என்னவென்றால்:—ஸ்ரீ வ்யாஸர், தமது ப்ரஹ்மஸூத்ரத்தில், அங்குஷ்ட மாத்ரனென்று ஶ்ருதியில் சொல்லப்படுமவன் ஜீவாத்மாவன்று அவன் பரமாத்மாவே என்பதை உபபாதிக்குமிடத்தில், ஜீவாத்மாவை வ்யாவ்ருத்திசெய்வதற்கு शब्दादेव- என்று ஒரு ஹேதுவைப் படித்திருக்கிறார். அதாவது: 'லிங்கம் முதலியவையான ப்ரமாணங்களால் இந்த நிர்ணயம் செய்யப்படவில்லை; ஸாக்ஷாத் ஶ்ருதியாலேயே [शब्दादेव] இது ஏற்படுகின்றது' என்று ईशानः-என்பதற்கு ஶ்ருதி பரத்வத்தை அப்யுபகமம் செய்துகொண்டு, அந்தப் பலத்தால் அவர் ஜீவனை வ்யாவ்ருத்தி செய்திருப்பதாகத் தெரிகிறது. அப்படிப் பட்ட பலவத்தான ஶ்ருதி பரத்வம் பெற்றிருக்கும் ஈஶாந ஶப்தத்தை ரூடி அர்த்தத்திலிருந்து விலக்கி அதை யௌகிகமாகச் செய்வது உசிதமாகுமா? ஜீவனை வ்யாவ்ருத்தி செய்வதுபோல நாராயணனையும் வ்யாவ்ருத்தி செய்வதாக அதை எடுத்துக் கொள்வதன்றோ உசிதமாகும்?' என்பதுதான்.

இந்த இரண்டு ஆக்ஷேபங்களுக்கும் ஸித்தாந்திகள் சொல்லும் ஸமாதாநமாவது:—முதலில், 'ஈஶாந' என்னும் பதம் யோகார்த்தத்தாலேயே இவ்விடத்தில் ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது என்பது, அதன் கர்மாவைப் போதிப்பிக்கும் भूतभव्यस्य-என்று இவ்விடத்தில் உபாதாநம் செய்யப்பட்டிருக்கும் பதத்திலிருந்து விளங்குகின்றது. 'ஈஶாந' என்னும் பதத்திற்குப் பசுபதி என்பது பொருளானால், 'பூதப்வ்யத்திற்குப் பசுபதி' என்று அநந்விதமாக நிற்கும். அந்தப் பதத்திற்கு ஈஶித்ருத்வம் பொருளாகும் பக்ஷத்தில் 'எவைகளுக்கு ஈஶிதா?' என்று ஆகாங்க்ஷை ஜனிக்க, 'பூத பவ்யத்திற்கு ஈஶிதா' என்பது ஸங்கதமாகு மன்றோ? ஆகையால், இவ்விடத்தில் 'ஈஶாந' ஶப்தத்திற்கு ரூட்யர்த்தமான 'பஶுபதி' என்னும் அர்த்தத்தை உபஸ்தாபநம்செய்வதில் யோக்யதை இல்லை. இம்மாதிரி, யோகரூடிமத்துக்களாயிருக்கும் ஶப்தங்களுக்கு யோகார்த்தத்துடன் அந்விதமான பதாந்தரங்களுடைய ஸமபிவ்யாஹாரம் இருக்கும் இடங்களில் ரூட்யர்த்தத்தை உபஸ்தாபநம் செய்ப யோக்யதை இல்லையென்றும், அந்தமாதிரி பதாந்தர ஸமபிவ்யாஹார மிராமலிருக்கும் இடங்களில் ரூட்யர்த்தத்தை உபஸ்தாபநம் செய்வதற்கு அவைகளுக்கு யோக்யதை உண்டென்றும் மஹாகவி ப்ரயோகங்களிலிருந்தும் ஏற்படும்.

''पद्मानि यस्याग्रसरोरुहाणि प्रबोधयत्यूर्ध्वमुखैर्मयूखैः''

என்னுமிடத்தில், 'ஸரோருஹ' பதத்திற்குப் 'பத்மம்' என்னும் ரூடியான அர்த்தம் இருக்கையிலும், இவ்விடத்தில் 'பத்ம' என்னும் பதத்துடன் ஸமபிவ்யாஹாரம் இருக்கிறபடியால், அது 'பத்மம்' என்னும் அர்த்தத்தைப் போதியாமல் கேவலம் 'ஸரஸ்ஸில் முளைத்திருக்கும்' என்னும் யௌகிகார்த்தத்தையே போதிப்பிக்கின்றதன்றோ? இப்படி 'ஈஶாந' என்

अङ्गुष्ठमात्रः पुरुषो ज्योतिरिवाधूमकः ।
ईशानो भूतभव्यस्य स एवाद्य स उ श्वः ॥ एतद्वै तत् ॥ १३ ॥

னும் பதம் இவ்விடத்தில் ரூட்யர்த்தத்தை உபஸ்தாபநம் செய்வதில் அக்ஷமமாகப் போய்விட்டபடியால், அதற்கு ஶ்ருதித்வமும் இல்லை யென்றே சொல்லவேண்டும். ஸ்ரீ வ்யாஸ ஸூத்ரத்தில் இருக்கும் 'சப்தாதேவ' என்னும் பதம் 'ஈஶாந' ஶப்த ரூப ஶ்ருதியைக் குறிக்கவில்லை; 'பூதபவ்யஸ்ய ஈஶாந:' என்னும் வாக்யத்தையே குறிக்கின்றது. 'ஶப்தாதேவ' என்பதிலுள்ள அவதாரணத்தின் தாத்பர்யமாவது: லிங்கத்தைக் காட்டிலும் வாக்யம் துர்ப்பலமாயிருந்தபோதிலும் ப்ரக்ருதத்தில் அங்குஷ்ட பரிமிதத்வம் ஜீவாத்ம பரமாத்மாக்கள் இரண்டுக்கும் பொதுவாயிருக்கிறபடியால் அது அர்த்தத்தை நிர்ணயிக்கப் போதாதாகிறபடியால், 'ஈஶாநோ பூதபவ்யஸ்ய' என்னும் வாக்யத்திலிருந்தே அந்த இருவர்களுடைய அந்யதர நிர்ணயம் ஏற்படவேண்டு மென்பதுதான்.

"तद्विष्णोः परमं पदम्" என்னுமிடத்தில் 'விஷ்ணோ:' என்னும் பதத்திற்கு 'விஷ்ணு அபேக்ஷயா உத்க்ருஷ்டமானது பஶுபதி என்று பெயருள்ள பரமமான வஸ்து' என்று பொருள் கொள்வது சரியன்று. "तद्विष्णोः परमं पदं सदा पश्यन्ति सूरयः" என்னும் தைத்திரீய உபநிஷத் வாக்யம் இதனால் ப்ரத்யபிஜ்ஞாபிக்கப்படுகின்றதன்றோ? அப்படி நித்ய ஸூரிகளால் எப்பொழுதும் பார்க்கப்படும் ஸ்தாநமானது வைஷ்ணவ ஸ்தாநமே என்பதை

"एकान्तिनः सदा ब्रह्मध्यायिनो योगिनो हि ये ।
तेषां तत्परमं स्थानं यद्वै पश्यन्ति सूरयः ॥"

என்கிற ஸ்ரீ விஷ்ணு புராண வாக்யம் உபப்ரும்ஹணம் செய்கின்றதாகையால், ப்ரக்ருதத்தில் விஷ்ணு ஸம்பந்தி ஸ்தாந விஶேஷமே ப்ரதிபாதிக்கப்படுகின்றது என்பது ஸித்தம்.

---

13. அந்தப் பரமாத்மாவின் ஜ்யோதிஸ்ஸானது அந்யாத்ருஶம் என்பதை இந்த மந்த்ரம் சொல்லுகின்றது.

[ப - ரை] **भूतभव्यस्य ईशानः अंगुष्ठमात्रः पुरुषः** - காலத்ரய வர்த்தியான ஸகல சேதநா சேதநங்களுக்கும் ஈஶ்வரனாயும் அங்குஷ்ட பரிமாணமுள்ளவனாயு மிருக்கும் அந்தப் புருஷன், **अधूमकः** - புகையற்றிருக்கும், **ज्योतिरिव [प्रकाशते]** - ஜ்யோதிஸ் போல [ப்ரகாசிக்கின்றான்]. **अद्य** - இப்பொழுது [இருக்கும் பதார்த்தங்களெல்லாம்], **स एव** - அவனையே ஆத்மாவாக உடைத்தா யிருக்கின்றன; **श्वः** - நாளை [இருக்கப்போகும் பதார்த்தங்களும்], **स उ** - அவனையே ஆத்மாவாக உடையன **एतद्वै तत्** - [கீழ்ச் சொல்லப்பட்டுள்ள பொருளையே இதற்கும் கொள்க.]

यथोदकं दुर्गे वृष्टं पर्वतेषु विधावति ।
एवं धर्मान् पृथक् पश्यंस्तानेवानु विधावति ॥ १४ ॥
यथोदकं शुद्धे शुद्धमासिक्तं तादृगेव भवति ।

---

14. ஜகத்திலுள்ள சேதநாசேதந வஸ்துக்களெல்லாம் பரமாத்மாவையே தமது ஆத்மாவாக உடைத்தாயிருக்கின்றன என்னும் விஷயம் பலவாறாக இந்த வல்லியில் விளக்கப்பட்டது. இப்படி ஸர்வமும் ப்ரஹ்மமொன்றையே ஆத்மாவாக உடைத்தாயிருக்கின்றது என்னும் ஜ்ஞாநத்தைப் பெறாமல், ஒவ்வொரு வஸ்துவும் வெவ்வேறு அதிகரணங்களை உடைத்தாயிருக்கின்றது என்று ப்ரமித்திருப்பவன் அம்ருதத்வத்தை அடையாமல் ஸம்ஸாரத்திலேயே உழல்கிறான் என்று இவ்விடத்தில் உபதேசிக்கிறார்.

[ப - ரை] **यथा** - எப்படி, **दुर्गे** - ஸுலபமாகக் போகக்கூடாத [மலையின் ஶிகரத்தில்], **वृष्टम्** - வர்ஷிக்கப்பட்ட, **उदकम्** - ஜலமானது, **पर्वतेषु** - [தாழ்ந்து சுற்றியிருக்கும்] மலைகளில், **विधावति** - வெவ்வேறாக விழுந்து விழுந்து ஓடுகின்றதோ, **एवम्** - அப்படியே, **धर्मान्** - [பரமாத்மாவொன்றையே ஆஶ்ரயித்து நிற்கும் அந்தர்யாமித்வ] தர்மங்களை, **पृथक्** - வெவ்வேறாக இருக்கும் வஸ்துக்களின் தர்மங்களாக, **पश्यन्** - பார்க்கிறவன், **तानेव अनु** - அந்தப் பர்வத அருவிகளையே அநுஸரித்து [அதாவது: அந்த அருவிகள் போலவே], **विधावति** - [அஜ்ஞாநத்தால் மூடப்பட்டவனாய் ஸம்ஸாரத்திலேயே] சுற்றிச் சுற்றி உழல்கிறான்.

தேவ மநுஷ்ய திர்யக் ஸ்தாவரங்களாகிற நான்குவித ஸ்ருஷ்டியும் ப்ரத்யந்த பர்வதங்கள்போல; பரமாத்மா உயர்ந்த பர்வத ஶிகரம் போல; அந்தப் பரமாத்மகதமான அந்தர்யாமித்வ தர்மம் மழை ஜலம் போல; தேவன் முதலிய ஸ்ருஷ்டிகளில் ப்ரவஹிக்கும் அந்த அந்தர்யாமித்வ தர்மம் ப்ரத்யந்த பர்வதங்களில் ப்ரவஹிக்கும் அருவிகள்போல; பரமாத்மா ஒருவனே எல்லா வஸ்துக்களிலும் அந்தர்யாமியாக இருக்கிறான் என்பதை அறியாதவன் உயர்ந்த பர்வதத்தை அறியாமல் சுற்றுப் பர்வதங்களில் விழும் ஜலத்தை வெவ்வேறு உத்பத்தியையுடையதாக ப்ரமிப்பவன் போல.

---

15. வஸ்து ஸ்திதியைச் சரியானபடி அறிந்தவனுடைய நற்கதியைச் சொல்லுகிறது இந்த மந்த்ரம்.

[ப - ரை] **गौतम** - ஹே கௌதமனே, **यथा** எப்படி, **शुद्धे** - சுத்த ஜலத்தில், **आसिक्तम्** - சேர்க்கப்பட்ட, **शुद्धमुदकम्** - சுத்தமான ஜலமானது, **तादृगेव भवति** - அதற்கு ஸத்ருஶமாகவே இருக்கிறதோ [விஸத்ருஶமாக மாறுகிறதில்லையோ], **एवम्**-அப்படியே, **विजानतः** - வஸ்து ஸ்திதியை

ஸ்ரீ :

சந்தா செலுத்தினவர்களின் பெயர்

1—10—'43 to 31—10—'43

[மற்றவர்களும் க்ருபை செய்து சீக்ரத்தில் சந்தாவைச் செலுத்த வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.]

For 1943.

			Rs.
1.	Sri S. Krishnaswami, Advocate, Karur	...	3 0
2.	,, Vadyar Srirangachariar, Padur	...	3 0
3.	,, T. Srinivasa Iyengar, Mannargudy	...	3 0
4.	,, A. Narayana Iyengar, Tillaisthanam	...	3 0
5.	,, M. K. Ramanujachariar, Mukandagiri	...	3 0
6.	,, V. Thirumalachariar, Sanyasigramam Street, Tinnevelly Junction	...	3 0
7.	,, R. Venkatesa Iyengar, Chidambaram	...	3 0
8.	,, M. Srinivasachariar, Trivellore	...	3 0
9.	,, K. Gopala Iyengar, Therazhundur	...	3 0
10.	,, K. Anantachariar, Damal, *via* Conjeevaram	...	3 0
11.	,, S. N. Venkatesa Iyengar, Coimbatore	...	2 0
12.	,, V. S. Narasimachariar, Umayalpuram	...	3 0
13.	,, C. Rajagopalachari, Boag Road	...	1 0

* * * *

சென்னையில் ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளியிருந்தபொழுது ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய ஆராதந கைங்கர்யத்தில் உதாரமான த்ரவ்ய ஸஹாயம் செய்தவர்களுட் சிலர்.

1. ஜட்ஜ் ஸ்ரீ உப. எஸ். வரதாசார்யர், மயிலாப்பூர்
2. ஸ்ரீ உப. எஸ். வேங்கடேச ஐயங்கார், ,,
3. ,, எஸ். ரங்கஸ்வாமி ஐயங்கார், ,,
4. ,, ,, அநந்தாசார்யர், மாம்பலம்
5. ,, ,, ஸௌந்தரராஜ ஐயங்கார் ,,
6. ,, P. கோபாலாசார்யர் ,,
7. ,, சக்ரவர்த்தி ஐயங்கார் ,,

ப்ரமுகர்களான பல ஸ்ரீவைஷ்ணவர்கள் உதவியால் பிரஸ் ஆரம்பித்துளோம்!

க்ரந்தம், தேவநாகரம் ஹிந்தி,
தமிழ், ஆங்கிலம் அச்சு வேலைகளும்,
எவ்வித ரூலிங், பைண்டிங் வேலைகளும்,

குறித்த காலத்தில் விரைவாகவும் நன்றாகவும் செய்து கொடுப்போம்.

ஆற்காடு பிரஸ், 27, புது அக்ரஹாரம், விழுப்புரம் (S.I.R.)

☞ எல்லா ஸ்ரீ வைஷ்ணவர்களின் ஆதரவையும் கோருகிறோம்.

Regd. No. M. **4437**

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற
கீழ்க் கண்ட புத்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்
விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

	சந்தாதாரர்கள் ரூ. அ. பை	மற்றவர்கள் ரூ. அ. பை
1. அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	5—0—0	6—0—0
2. ௸ (பைண்டில்லாதது) ...	4—0—0	5—0—0
3. உக்திநிஷ்டாபரணம் ந்யாஸநிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0—6—0	0—8—0
4. உக்திநிஷ்டாபரணோத்யோதம் („)	0—4—0	0—6—0
5. வீக்ஷாரண்யக்ஷேத்ர மாஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் ... (க்ரந்த லிபி)	0-12—0	1—0—0
6. ஸ்ரீ அஹோபில மாஹாத்ம்யம் („)	0—4—0	0—6—0
7. ௸ (தெலுங்கு லிபி)	0—6—0	0—8—0
8. ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி) ...	0—3—0	0—4—6
9. ஸ்ரீ வீரராகவஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—2—6	0—3—0
வேறு இடங்களில் அச்சிடப்பெற்றவை		
1. மீமாம்ஸா பாதுகை ... ... (பரித்ராணத்துடன் க்ரந்த லிபி)	0—8—0	0-10—0
2. ஸமுத்ரயாந தோஷ நிர்ணயம்; விதவா விவாஹ கண்டநம் (நாகர லிபி) ...	0—4—0	0—6—0
3. தத்வத்ரய நிரூபணம் (க்ரந்த லிபி) ...	0—3—0	0—4—0

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள் கீழுள்ள விலாஸத்திற்கு எழுதவும் :—

மானேஜர், **ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,**

23—4—'43.] நெ. 5, ராமஸ்வாமி தெரு, தி. நகர், சென்னை.

Printed by K. Satakopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street, G. T., Madras.
Edited & Published by S. Vasudevachariar, 5 Ramaswami Street, Tyagarayanagar, Madras.